497

497
1-50.

விரோதி ஹுல } மாசிமீ

{ ஸம்புடம் - 9
{ ஸஞ்சிகை - 2

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்:
P. S. ஸ்ரீநிவாஸ தேசிகாசார்யர், M.A., B.L., சிரோமணி.
(அட்வொகேட்)

: ப்ரசுரிக்கு மிடம் :

நெ. 2, ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம்,
சென்னை—7.

FEBRUARY 1950
Vol. 9 No. 2.

JL
இ22ரை211, M41
M50·9·2.
189267

விஷய ஸூசிகை

		பக்கம்.
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	36
2.	ஸகுண ப்ரஹ்ம நிர்ணயம்	39
3.	நற்போத போக்த	43
4.	பட்டர் பரவும் பரமன்	48
5.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	55
6.	செய்திகள்	57
7.	ஸம்பாதகரின் குறிப்புகள்	62

பெண்கள் கலியாணம்.

உங்கள் பெண்ணுக்கு எப்போது விவாகம் நடக்கும்? எந்தத் திக்கிலிருந்து கணவன் வருவான்? மாங்கல்ய பாவம் எப்படி இருக்கிறது? பர்த்ரு பாவம், புத்திர பாக்கியம் இவை எப்படி? தம்பதிகளின் அன்யோன்யம் எவ்வாறு அமையும்? இத்தகைய கேள்விகளுக்கேற்ற விடைகளை நாங்கள் எழுதியனுப்புகிறோம். பெண் குழந்தைகளுடைய ஜாதகத்தை நன்ருக ஆராய்ந்து இந்த விஷயங்களைச் சாஸ்திர பூர்வமாக நிர்த்தாரணம் செய்து சொல்வோம். பெண்களுடைய துர்ப்பாக்கியங்களான பால வைதவ்யம், ரண்டாயோகம், விஷகன்யா யோகம் என்னும் மூன்று வகையான அமங்கள யோகங்களுக்குச் சாஸ்திரங்களில் தக்க பரிகாரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. விவாகத்திற்கு முன் ஏதேனும் தோஷம் உண்டா என்பதைத்தெரிந்துகொண்டு அதற்கேற்ற பரிகாரங்களைச்செய்து தோஷத்தைப் போக்கிக்கொள்ளலாம். அத்தகைய பரிகாரங்களை நாங்கள் விவரமாக எழுதி அனுப்புவோம். **'விவாக விஷயம்'** குறித்து ஜாதகத்தை உடனே அனுப்புங்கள்.

வி. பி. செலவு உட்பட ரூ. 3—8—0.

ஸ்ரீ கிருஷ்ண விலாஸ ஜோதிஷசாலை
மோகனூர் (Via) கரூர் S. I. Ry.

ஓர் விண்ணப்பம்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் பம்பாய் ஏஜெண்டின் விலாஸம் :—

Sri M. V. Varadachari, B.A., 61, Ghod Bunder Road, Jogeshwari P. O. Bombay.

இந்த ஸ்வாமி பம்பாய் நகரத்துக்கும் பம்பாய் மாகாணத்துக்கும் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவுக்கு (Honorary Agent) ஆனரெரி ஏஜெண்டாக ஏற்படுத்தப் பட்டிருக்கிறார். புதிய சந்தாதாரர்களே யன்றி, பழைய சந்தாதாரர்களும் இவரிடம் தங்கள் சந்தாத் தொகையை (பாக்கியுள்பட) செலுத்த வேணுமென்றும் ப்ரார்த்திக்கிறோம். இவ்விடம் ஆபீஸுக்குத் தகவல் கிடைத்ததும், அவர்கள் செலுத்திய தொகைக்கு ரசீது அனுப்பப்படும். ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா பத்திரிகையும் தொடர்ந்து அனுப்பப்படும்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 9	விரோதி ஹூ மாசி மீ	ஸஞ்சிகை 2

"அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥"

———— ∴ ————

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபதஸக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாதேவ்யா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(9–ம் அங்கம்)

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

" யஜ்ஞாதிகரணம் ப்ரபத்தியஜந ஹோமாத்யைர் அத்ர
ஸந்த்யஸந ஸம்பாதநார்த்ருதிபி: ஸமாராதித: ।
ஸர்வம் த்யஜதி தேஹிநாம் இதி ஹி ஸம்ப்ருச்சாயத்ருதி:
ச்ருதிஷ்விதி ஸர்வாபேக்ஷிதி நயவதீதி ஸாதாதி ந: ॥ "

இந்த ச்லோகம் ஸாத்யோபாய சோதநாதிகாரத்தில் முதல் ச்லோகம். ஸங்கல்ப ஸூர்யோதய நாடகம், முப்பதாவது ஸ்ரீ பாஷ்ய ப்ரவசநம் முடிந்த பின் ஸாதிக்கப்பட்டது. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் சரம க்ரந்த மென்பர். அந்த அதிகாரத்திற்கு இது முற்றிலும் பொருத்த முடையது. இந்த ச்லோகத்தில் 'யஜந' பதமும் 'ஹோம' பதமும், பரந்யஸநத்தை யாக ஹோமங்களாக ச்ருதி வர்ணிப்பதையும் ஒருவாறு சப்த த்வநியால் காட்டி, ச்ருதி விஹிதமானதால் பரந்யாஸம் ஸர்வாதிகாரமாகக் கூடுமோ என்கிற ஆக்ஷேபத்தைக் கிளப்பி, 'ஸர்வஸ்ய சரணம் ஸுஹ்ருத்' என்ற ச்வேதாச்வதர ச்ருதியே எல்லோருக்கும் சரணம் புகத்தக்கவன் பகவான் என்று ஸர்வ ஸாமாந்ய தர்மமாக ஓதியிருப்பதாலும், 'ஸர்வலோக சரண்யாய' 'ஸர்வேஷாம் ஸர்வபூதாநாம் சரண்ய' 'ஸர்வயோநிஷு நியதம்' முதலிய உபப்ரஹ்மணங்கள் அதை நன்கு தெளிவிப்பதாலும், ஸர்வரும் அதிகரிக்கத் தடையில்லை என்பதையும் ஸூசிப்பதாக, 'இப்ரபத்தியும் ஒரு வைதிக தர்மமன்றோ? இதுவும் ஒரு யாகவிசேஷமாக வன்றோ ந்யாஸ வித்யையில் ஓதப்படுகிறது?.........இது ஸர்வேச்வரனை ஸர்வருக்கும் சரண்ய னென்று ஓதுகிற ச்வேதாச்வதர ச்ருதி பலத்தாலே பரிஹ்ருதம்' என்ற அதிகாரத் தொடக்க ஸ்ரீஸூக்தியால் ஒருவாறு சொல்லலாம். அந்த அதிகாரத்திற் கென்று அமைத்த ச்லோகத்தை இங்கே நாடகம் எழுதுகையிலே நிவேசநம் செய்திருக்கலாம். அல்லது எழுதியபின்பு அதிகாரத்திலிருந்து சேர்த்திருக்கலாம். இந்த இடத்தில் ஸமாதியை விஸ்தரிக்கப்போகையில் அதிகாரி விபாகம், உபாய வ்யவஸ்தை, ஸாத்யோபாயத்தின் ஆவச்யகதை, ஔசித்யம் இவற்றைக் குறிக்கும் இந்த ச்லோகத்தை இங்கே வைப்பது உசிதமே. யஜநம் முதலியவற்றை இங்கே குறித்தது 'த்ருஷ்டாந்தமாக' என்று ஸாரப்ரகாசிகை. யாகம் அர்ச்சனை முதலியவை எப்படி செய்யவேண்டிய ஸாத்யோபாயமோ, அப்படியேதான் பரந்யாஸமும் என்று ஸூசநம். பாவநா என்பது த்யாநம் பக்தி யோகம். 'ஸர்வம் த்யஜதி தேஹிநாம்' என்பதால் 'ஸர்வத: ப்ரபத்தே:' என்கிற ஸாதநாத்யாய ஸூத்ரத்தை ஸூசிக்கிறார். 'நயவதீதி' என்கிற பதத்தால் கூறும் ந்யாயம் அது. 'ச்ருதேர்' என்றதால் 'ஸர்வஸம்விஷ்டீயாகஸ்ஸர்வாதிரந் விசிஷ்டவிஷ்ணோ ஸம்ஸராய'

89267

என்ற கம்பீரமான ப்ராசீந த்ரமிட பாஷ்ய ஸூக்தியை ஸூசிப்பதாக வ்யாக்யாநம். த்ரமிடர் அத்வைத தர்ஸநத்திற்கும் ப்ரமாணமான பாஷ்யகாரர். 'தமேநம்வீ்ருதஃ வ்ருணீதி' என்ற ச்ருதியும் உதாஹரிக்கப்பட்டது. பல ஸங்கல்பமாகிய ஸூர்ய ஹுதித்துத்தான் ஸம்ஸார ராத்ரி தொலையுமென்பதை இந்த ச்லோகம் விளக்குகிறது. மேலே 44-வது ச்லோகத்தில் ஆறங்க ஸமாதி என்று ப்ரபத்தியையும் எட்டங்க ஸமாதி என்று பக்தியையும் குறிக்கப்போகிறார். ஆகையாலே,

“ ஶ்ரூஹ–ணைவ ஸவஜமதி–ஹ்வவ்யுத் ஶ்ரூஷயஶ்ருவா ஹவஸிஸ்யுகெஷிநா ।
ஈஹசஷூஜ வஸிசரஷ உஹவஉதி தஹூவயூஷிசதெ நிதிக்ஷூதாழ ॥ ”

நான் நிமித்தமாத்ரமே; பலம் அவருடையதே; வ்யாபாரம் ஜயம் எல்லாம் அவருடையதே; பயனும் அவருடையதே. 'அஹம்' நான் ஒரு அசேதநமான தர்ப்பம் (த்ருணம்) போல. காகாஸுரனை மூன்று லோகங்களையும் சுற்றும்படி துரத்தித் திரும்பவும் ராமன் ஸந்நிதிக்குக் கொண்டுவந்தது அந்த த்ருணத்தின் ஸக்தியா? ராமனின் ஸக்தியா? ப்ரஹ்மாஸ்த்ர மந்த்ரத்தால் அபிமந்த்ரித்து எறியப்பட்டது புல். தாம் குறித்த லக்ஷ்யத்தை அடிக்க ப்ரயோகிக்கப்பட்டது. அந்த த்ருணம்போல நானும் நிமித்தமாத்ரமே. முமுக்ஷு ஜீவன் மூலமாக நான் காம க்ரோத மோஹாதிகளை ஜயித்து, மநஸ் முதலியவற்றை வசப்படுத்தி, ஸமாதி யோக்யமாகச் செய்யப் பகவானையே ஸரணாகதி பண்ணி, அவரும் அந்த பாரத்தை ஏற்றுக்கொண்டு, என்னுடைய ஸத்ருக்களைத் தம்முடைய ஸத்ருக்களாக நினைத்து அவர்கள்பேரில் சீறி, என்னையே அஷ்டாக்ஷர த்வயாதி மந்த்ரங்களால் அபிமந்த்ரணம் செய்வித்து, ஸத்ருக்கள்பேரில் ப்ரயோகித்து அவர்களைத் தொலைத்தார். ஸம்ஸாரி ஜீவர்களெல்லோரையும் ஸாதநத்தி லிறக்கி அந்த வ்யாஜத்தை வைத்துத் தம் குழந்தைகளான அவர்களை விமோசநம் செய்து தம் வீடு சேர்க்கத்தானே அவர் ஸர்வ ஜகத்தையும் ஸரீரங்களோடு ஸ்ருஷ்டிப்பதும், காப்பதும், லயிப்பதுமாகத் தம் எல்லையற்ற க்ருபா வெள்ளத்தால் திரும்பவும் திரும்பவும் நடத்திக்கொண்டு வருகிறார். 'கேளி' 'லீலை' என்பது தயை என்னும் ஸ்வபாவம் என்று சந்த்ரிகை முதலியதில் காட்டப்பட்டுள்ளது.

வ்யவஸாயர்—உம் பாாக்ரமத்தைக்காட்டிலும் உம் விநயம் மிகப் பெருமையாக இருக்கிறதே. உம்மை வேதாந்த பீடத்தில் வீற்றிருக்கச்செய்து, இப்பொழுதே அபிஷேக மங்களோத்ஸவம் நடத்தவேணும்.

ராஜா—இப்படிப் பேசவேண்டாம். ஜீவனுக்கு ஸமாதி ஸித்திப்பதற்கு முன் எனக்கு எப்படி அபிஷேகம் செய்யலாம்? இப்பொழுது,

“ கஸணஹஸிணஶ்ரேணீஷஸாவகக்ஷணதாஸ–ணாம்
கஶு–ஷ தவ நஹூாயநாயா நிஷாவவிஜரஹூதாழ ।
விஷவிஷயாவூாஷொதூணாஉயீம் ஊஶதரஸிகம்
உ–திஸ திவ தஙூ–க்ஷிதாஸம் ஶவெஷயதெ உ–ஹ–ஃ ॥ ”

கரணஹரிணஶ்ரேணீ—இந்த்ரியங்களாகிய மான்களின் கூட்டத்தை; [illegible]—வீணாக வெகுதூரம் மத்யாந்ஹ வெயிலில் தாஹத்தைத் தீர்க்க நீர் வெள்ள மோடுவது போன்ற பொட்டு ஜலமுமில்லாத கானலைக் காட்டி ஏமாற்றி மிக்க கொடுமை செய்வதும்; [illegible]—நம்முடைய பாபங்களாகிய பாலைவனத்தில் காய்வதனால் ஒரே வெப்பமும் கானலுமாகிய மாயை என்ற பெயரையுடைய, ஆச்சர்ய மோஹந ஶக்தியையுடைய ப்ரக்ருதியால் பயங்கரமாகப் பெருக்கப்பட்டதும்; விஷயவிஷயாஸ்வாதோத்கண்டாமயீம்—பற்பல பொல்லாத விஷயங்களைச் சுவையுடன் அநுபவிக்க ஆசைமட்டும் மிகுந்த; ஸுகம்ருகத்ருஷ்ணிகாம்—சிற்றின்ப மென்னும் கானல்போன்ற இன்ப வெள்ளத் தோற்றத்தை; [illegible]—அஸார மென்று அடியோடு துறந்து; முஹுர்முஹு:—திரும்பவும் திரும்பவும்; [illegible]—மோக்ஷத்வாரம் திறப்பதையே; [illegible]—ப்ரஹ்ம குணங்களை இன்பத்துடன் பயின்றுவருபவர்; கவேஷயதே—தேடிக்கொண்டே இருக்கிறார்.

'உண்ணிலாவிய ஐவரால் குமைதீற்றி என்னை உன் பாதபங்கயம் நண்ணிலா வகையே நலிவான்' என்பதுபோல, இந்த்ரியங்களாகிய மான்களைப் பகவானுடைய மாயை என்னும் ப்ரக்ருதி, ஸர்வ ச்ரமஹரமும், ஸர்வ தாபதாஹ நிர்வாபணமான பகவானுடைய பாதபங்கயத்தை அணுகாமல் தூரத்தில் ப்ரக்ருதி மாயைக் கானலில் தாஹம் தீர்க்கும் நீர் ஓடைபோலக் காட்டி வெயிலில் இழுத்துக்கொண்டுபோய்த் தாஹத்தை இன்னும் பெருக்கிக் கொடுமை செய்கிறது. ப்ரபோத சந்த்ரோதயத்தில் 'மத்யாஹ்நார்கமரீசிகாஸ்விவ பய:பூரோ யதஜ்ஞாநத:' என்ற முதல் நாந்தீ ச்லோகத்தை ஸ்வாமி இங்கே நினைத்து அந்த வர்ணநத்தை ஓர் விதமாக மாற்றி வர்ணிக்கிறார். மத்யாந்ஹக் கானலில் ப்ரகாசத்தைத் தந்து உண்மையை விளக்கவேண்டிய உஷ்ண ஸூர்ய கிரணங்களையே குளிர்ந்த ப்ரக்ருதியான ஜல ப்ரவாஹமென்று ப்ரமிக்கிறார்கள். 'ஜ்ஞாந ப்ரபையையே இருளுக்குப் பொய்யாக ஆதாரமாக் கொண்டு ப்ரமிக்கிறார்கள்' என்று அங்கே. வெயிலும் பொய்யல்ல. ப்ரஹ்மத்தினிடமே ப்ரக்ருதி இருப்பும் பொய்யாகத் தோன்றுவதல்ல. ஆனால் அது மிகக் குணம் போலவும் ஸாரம் போலவும் பொய்யாகத் தன்னைக் காட்டி நம்மை ப்ரமிக்கச் செய்கிறது. அது பொல்லாதது. மிக மோசம் செய்வது. பகவத் ஸ்வரூபத்தையும் நம் ஸ்வரூபத்தையும் அடியோடு மறைத்துத் தப்பாக க்ரஹிக்கும்படி செய்கிறது. அது நமக்கு அஸாரம்; ஹேயம். அதில் எமக்கு ஒரு பரிவும் ஆதாரமுமில்லை. 'மங்கவொட்டுன் மாமாயை' என்றும், 'மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே' என்றும் உபதேசிக்கப்பட்டபடி அவனையே கதியாகப் பற்றி அந்த மாயையை நாங்களும் கடக்கத்தான் முயலுகிறோம். '[illegible]' என்றபடி ப்ரக்ருதி முதலிய காட்சிப்பொருள்களை நாம் பொய்யென்று சொன்னாலும் அவை நம்மை விட்டு விடுவதில்லை. உளதான அவ்வனர்த்தங்களை ஈச்வரனுடைய அருளினால் தாண்டவேண்டும். நெருப்பைப் பொய்யென்றால் அது அணைந்துபோகாது. அதை ரக்ஷணாதிகாரிகளை ப்ரார்த்தித்து, அவர்கள் உதவும் நெருப்பணைக்கும் யந்த்ரத்திலிருந்து ஜலத்தை உயரத்திலிருந்து பொழிந்துதானே அணைக்கவேண்டும். பகவானுடைய திவ்யதயா

வர்ஷத்தால் ஸம்ஸாராக்நியை அணைக்கலாம். ம்ருகத்ருஷ்ணிகை என்பது எப்படி அஸாரமோ, அப்படித்தான் ப்ரக்ருதி இன்பம் போலக் காட்டும் விசித்ர விஷயங்கள். இங்கே 'அபவாதம்' என்னும் விமர்ஶ ஸந்தியின் முதல் அங்கம். விரோதியின் தோஷத்தை எடுத்துக் காட்டுவது அபவாதம். பொய் யென்று தள்ளுவ தல்ல; அஸாரம். ஹேயமென்றே தள்ளுவ தென்று ரஸம். இப்பொழுது ப்ரஹ்மத்தின் அநுபவக் காட்சிக்கு த்யாந யோகம் தொடங்கு கிறது. அது முற்றி ப்ரயோஜநம் பூர்ணமாக ஸித்திக்கவேணும். பாரீர்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸகுண ப்ரஹ்ம நிர்ணயம்

[ஸம்புட 8, ஸஞ்சிகை 12, பக்கம் 360-ன் தொடர்ச்சி.]

[ஸ்ரீ. உப. v. ஸ்ரீநிவாஸய்யங்கார், ஸ்ரீ ஶார்ங்கீ விஹார், மலாட், பம்பாய்]

மறுநாள் ஸபை கூடியதும் கதாதரபுரம் ஸுதர்சநாசார்ய ஸ்வாமி எழுந்து, முதல் நாள் சொன்ன அத்வைத பக்ஷத்துக்கு ஸமாதாநம் சொன்னார்.

"க்ஷேத்ரேஷு ஸம்யமிநாம் ப்ரஸவம் அஶேஷம் ...
தஸ்யா: ஹ்ருத்யாஶ்ரயணம் ...
கிம் அந்நிவர்த்ய நீய தாஶ்யே ...
வக்த்ரம் ... ஜகத் ப்ரஹ்ம ॥"

"ப்ரஹ்ம ஶ்ரீவத்ஸ ...
ஜீவாஶ்ச ... தத்வம் ... தயா ।
ப்ரஹ்மாநந்த ...
... ॥"

என்று ஸ்வ ஸித்தாந்த ஸங்க்ரஹத்தைச் சொல்லிப் பின் வருமாறு உபந்ய ஸித்தார்:—

'அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' என்கிற ஸூத்ரம் முதல் 'அநாவ்ருத்தி ஶப்தாத்' என்பதுவரை ஒரு ஸூத்ரம் கூட நிர்க்குண ப்ரஹ்ம வாதத்துக்குப் பொருந்தா தென்பதை நிரூபிப்பது ஸுலபமானது. இதை ஸ்தாலீபுலாக ந்யாயத்தால் சில ஸூத்ரங்களை எடுத்துக்காட்டி நிரூபிப்போம். அத்வைத ஸித்தாந் தத்துக்கே 'அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' என்கிற ஸூத்ரம் பொருந்தாது. நிர்விஶேஷ ஸ்வயம் ப்ரகாஶமான சிந்மாத்ரமான வஸ்து ஜ்ஞாநத்துக்கு விஷய மாகாததால் அது எப்படி ஜிஜ்ஞாஸ்யமாக இருக்க முடியும்?

தீக்ஷிதர்:—எங்கள் ஸித்தாந்த ரீதியாக ஆரோபிதகுண விக்ரஹாதி விஶிஷ்டமான ப்ரஹ்மம்தான் ஜிஜ்ஞாஸ்யம்.

ஸு. ஸ்வாமி :—அதுவும் அவித்யையின் காரணத்தால் ஏற்பட்டதால், அது கட்டாயம் முமுக்ஷுவுக்கு ஜிஜ்ஞாஸ்யமான வஸ்துவாகச் சொல்ல முடியாது. ப்ரஹ்ம ஶப்த ப்ரயோகமே ஸூத்ரத்தில் உங்கள் ஸித்தாந்த ரீதியாகப் பொருந்தாது. 'ப்ருஹிவ்ருத்தௌ' என்கிற தாது நிர்த்தேஶத்தால் ஏற்பட்ட பதமானதாலும், 'ப்ருஹத்வாச்ச ப்ருஹ்மணத்வாச்ச ப்ரஹ்மேத்யபிதீயதே' என்கிற ச்ருதி வாக்யத்தாலும், ப்ருஹத்வ குண யோகத்தோடு கூடியது ப்ரஹ்மமென்று ஏற்படுவதால், ஸூத்ரகாரர் ப்ரஹ்ம ஶப்தத்தை ப்ரயோகிப்பதிலிருந்து இந்த ஸூத்ரம் நிர்க்குண ப்ரஹ்மத்தை இலக்காக உடையதல்ல. 'ஜந்மாத்யஸ்ய யத:' என்கிற ஸூத்ரமும் ப்ரஹ்ம ஸ்வரூப லக்ஷணோபதேஶபரம். இங்கு லக்ஷணமும் அஸாதாரண தர்மம். அது எப்படி நிர்விஶேஷ சிந்மாத்ர வஸ்துவுக்குப் பொருந்தும்?

தீக்ஷிதர் :—நாங்கள் ஸ்வரூப லக்ஷணத்தை உபலக்ஷணமாக வல்லவோ சொல்லுகிறோம்?

ஸு. ஸ்வாமி :—இது இன்னும் மோசமான கக்ஷி ஸ்வாமீ! ஏனென்றால்: ஒன்றுக்கு உபலக்ஷணமாக ஒரு வஸ்துவைச் சொல்வதானால், அந்த உபலக்ஷ்ய வஸ்துவுக்கு முதல் முதலாக ஒரு ஆகாரம் இருந்தாக வேணும். அப்படிப்பட்ட ஆகாரம் நீங்கள் சொல்லும் நிர்க்குண ப்ரஹ்மத்துக்கு இல்லாததால், அந்த ஸூத்ரமும் உங்கள் ஸித்தாந்தத்துக்குப் பொருந்தாது. நிற்க: ஸாமாநாதிகரண்யமும் ஸவிஶேஷமான வஸ்துவில்தான் ஏற்பட்டதென்பது ப்ரஸித்தம். தவிர: அத்வைத ப்ரஹ்மமானது ஶாஸ்த்ரகம்ய மில்லாததால், ஶாஸ்த்ரயோநித்வாதிகரணமும் பொருந்தாது. ஸமந்வய ஸூத்ரத்தை எடுத்தால், அந்வயமானது பேதத்துக்கு ப்ராணபந்துவானதால் இந்த ஸூத்ரமும் பொருந்தாது. ஆநந்தமயாதிகரணத்தில் ப்ராசுர்யார்த்தத்தில் 'மயட்' ப்ரயோகிக்கப் பட்டிருப்பதாலும், ஆநந்தாப்யாஸத்தை ஹேதுவாகச் சொல்லி யிருப்பதாலும், பேத வாதமே ப்ரஸித்தமாகத் தெரிகிறது. ஜ்யோதிரதிகரணத்தால் அருணபிதாமஹம் மித்யாவாதத்தை வேரோடு களைகிறது. இதை ஸ்ரீ தேசிகன்

ஜ்யோதிரதிகரணே "அருணாபியா நம் ஶரணாயதே ம்ருஷாவாதவ்ருநிர்விஶேஷவ்ருக: அருண: கராவாதீஷ்வபி ந க்வசேஷ்ட ஶோகேஷ்ட ॥"

என்கிறார். இப்படி ப்ரஹ்ம ஸூத்ரத்தில் முதல் அத்யாயத்தில் உபக்ரம ஸூத்ரங்கள் ஸகுண ப்ரஹ்மத்தையே குறிப்பதால், மற்ற மூன்று பாதங்களிலுள்ளவைகளும் இதே ந்யாயத்தால் ஸகுண ப்ரஹ்மத்தையே குறிப்பதாகக் கொள்ள வேணும்.

நிற்க: இரண்டாவது அத்யாயமான அவிரோதாத்யாயமும் முதல் அத்யாயத்தின் ஶேஷமாகலால், அது, முன் அத்யாயத்தை அநுஸரித்து ஸகுண ப்ரஹ்மத்தைக் குறிப்பதாகக் கொள்ளவேணுமே யொழிய, வேறுவிதமாகக் கொள்ள இடமில்லை. வைராக்ய பாதமும், உபயலிங்க பாதமும், ஸம்ஸாரியான ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கு முள்ள பேதத்தையே சொல்கின்றன. குணோபஸம்ஹார பாதத்தின் பெயரே நிர்க்குண ப்ரஹ்ம வாதத்துக்கு ஹ்ருதய

சூலம். அங்காங்கி பாவ வாதமோ நிர்க்குண ப்ரஹ்மவாதத்துக்குக் கர்ண ஜ்வரம். ஆனதால் மூன்று அத்யாயத்திலும் ஸகுண ப்ரஹ்மம்தான் நிர்ண யிக்கப்படுகிறது. பலாத்யாயத்தில் சொல்லப்படும் பலத்தால் நிர்க்குணவாதி களின் பக்ஷம் ப்ரயோஜந மற்ற தென்பது வெட்ட வெளிச்ச மாகிறது. பரமாத்ம ஸேவியான ஜீவனுக்குத் தான் புண்ய பாப ரூபமான கர்மாவின் அச்லேஷ விநாசத்தையும், தேஹத்திலிருந்து உத்க்ரமணத்தையும், அர்ச்சிராதி தேவ யாநத்தால் சொல்வதையும்,

"பரம்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே"

என்கிற ச்ருதிப்படி ஸ்வ ஸ்வரூபாவிர்ப்பாவத்தையும், 'ஏற்றிவைத்து ஏணி வாங்கி' என்கிற ப்ரகாரம் அபுநராவ்ருத்தியையும் ஊடுருவிக் கவனித்தால், ஸகல ச்ருதிகளும் அதை அநுஸரித்த ப்ரஹ்ம ஸூத்ரங்களும் ப்ரஹ்மத்தை ஸகுணமாகச் சொல்வதாகவே நன்ருய்ப் புலப்படுகிறது.

மேலும் : ஜிஜ்ஞாஸ்யமாக முதல் ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட ப்ரஹ்மம் தான் 'நாத்மா ச்ருதே:' முதலிய ஸூத்ரங்களில் ஆத்ம சப்தத்தால் சொல்லப்படுகிற தென்று அத்வைதத்தில் சொல்வது பொருந்தாது. ஏனெனில் : 'ஜ்ஞோத ஏவ, கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்வாத், பராத்து தச்ச்ருதே:' முதலிய ஸூத்ரங்களில் சொல்லப்பட்ட ஆத்மாவும், முதல் ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட ப்ரஹ்மமும் ஒன்றுதான் என்று சொல்லும் பக்ஷத்தில், அந்த ஸூத்ரங்களில் சொல்லப்பட்ட ஆத்மாவுக்கு ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ பரமாத்மாயத்தத் வாதிகள் சொல்லப்பட்டிருப்பதால், இவை உபய ஸித்தாந்த ரீதியாகவும் பொருந்தாது.

தீக்ஷிதர் :—ப்ராந்தியால் அல்லவோ ஜ்ஞாத்ருத்வாதிகள் எங்கள் ஸித்தாந்த ரீதியாக ஏற்படுவதாகக் கொள்கை ?

ஸ. ஸ்வாமி :—ரொம்ப அழகு. முமுக்ஷுவுக்குப் பரிசுத்தாத்ம ஸ்வரூபத்தை உபதேசிக்கும் ஸமயத்தில் ப்ராந்தி ஸித்தமான ஆகாரத்தை உபதேசித்து ஸமர்த்திக்கப் பார்ப்பது யுக்தமாகாது. அப்படி தீக்ஷிதர் அதையே பிடிவாதமாகக் கொள்ளும் பக்ஷத்தில் 'நாத்மா ச்ருதே:' என்கிற அதிகரணத்துக்கு லோக ரீதியை அநுஸரித்து ஆத்மாவுக்கு உத்பத்தி விநாசமும் சொல்ல வேண்டியதாக வரும். இல்லை, லோக ரீதியாக ஏற்பட்ட ஆகாரத்தை மாற்றிச் சொல்வதுதான் 'நாத்மா ச்ருதே:' முதலிய ஸூத்ரங்களின் தாத்பர்ய மென்ருலோ, லோகரீதியாக அந்த ஆத்மாவுக்குக் கர்த்ருத்வாதிக மில்லை யென்று உபதேசிப்பதே மேலாகப் பொருந்தும். ஸூத்ரகாரரின் அபிப்ராயம் அப்படித்தான் இருக்கட்டுமே என்ருலோ, இது ரொம்ப அழகான கக்ஷி. இதுவே ஸூத்ரங்களை அந்யதாகரணம் பண்ணுவதாகிறது.

தீக்ஷிதர் :—ஆசார்யாள் ஸ்வாமி! என் மற்ருெரு ஸம்சயத்திற்குக் கொஞ்சம் செவிசாய்க்க வேணும். 'அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' என்கிற ஸூத்ரத்தில் சொன்ன ப்ரஹ்மத்தைவிட்டு, 'நாத்மா ச்ருதே:' என்கிற விடத்

தில் அப்ரஸ்துதமான வேறொரு ஆத்மாவைப்பற்றி விசாரிக்க வேண்டிய அவச்யம் என்னவோ? ஸாதாரணமாக முமுக்ஷு அறிய வேண்டிய ப்ரஹ்ம ஸ்வரூபத்தைப்பற்றி விசாரிக்கும் ஶாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட ப்ரஹ்மத்தையே 'நாத்மாஶ்ருதே:' என்கிற ஸூத்ரங்களில் ஆத்ம ஶப்தத்தால் சொல்லப்படுகிற தென்பது ந்யாயமானதாகத் தோன்றுகிறதே. அப்படியிருக்க, ஆசார்யாள் பிந்நமான ஆத்மாவை விசாரிப்பதாகச் சொல்வது எப்படி யுக்தமாகும்?

ஸு. ஸ்வாமி :—இந்தக் கேள்வியை அப்படியே ஏற்றுக்கொள்கிறேன். 'அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' என்கிற ஸூத்ரத்தில் ப்ராப்யமான ப்ரஹ்மத்தைப்போல் அதிகாரியான முமுக்ஷுவையும் ப்ரஸ்தாவிப்பதால், அப்படிப்பட்ட முமுக்ஷுவுக்கு ப்ராப்யத்தின் ஸ்வரூபமும், ப்ராப்தாவான ஆத்மாவின் ஸ்வரூபமும், இவையிரண்டும் தெரிய வேண்டியது அவச்யமானதால், முதல் ஸூத்ரத்தில் சொல்லப்படும் ப்ரஹ்மத்தைவிட வேறானதான ஜீவாத்மாவைப் பற்றி 'நாத்மாஶ்ருதே:' என்கிற விடத்தில் விசாரிக்கப்பட்டது. மேலும்: பரமாத்மாவிலும் பிந்நமான ப்ரதாநத்தை ஈக்ஷத்யதிகரணாதிகளில் விசாரிப்பதுபோல் 'ஜ்யோதிஶ்சரணாபிதாநாத்' 'ப்ராணஸ்ததாநுகமாத்' முதலிய ஸூத்ரங்களால் பரமாத்மாவை விட்டு வேறான ஜீவனையும் முதல் அத்யாயத்தில் விசாரிக்கப்படுகிறது. அப்படி தீக்ஷிதரவர்கள் சொல்லுகிறபடி, பரமாத்ம ஸ்வரூபத்தை விசாரிக்கும் ஸமயத்தில் பிந்நமான ஜீவாத்மாவை விசாரிக்க வேண்டிய அவச்யமில்லை யென்றால், 'நவியதஶ்ருதே:' என்கிற ஸூத்ரங்களால் 'வியத்' ப்ராணாதிகளும் விசாரித்திருக்க வேண்டியதில்லை. எப்படி அந்த ஸூத்ரங்களைத் தீக்ஷிதரவர்கள் ஒப்புக்கொண்டார்களோ, அதே காரணத்தால் முதல் ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட ப்ரஹ்மத்தைவிட்டு வேறான ஆத்மாவை 'நாத்மாஶ்ருதே:' என்கிற விடத்தில் விசாரிப்பது யுக்தமென்றே ஒப்புக்கொள்ள வேணும். மேலும்: 'அஸம்பவஸ்து ஸதோऽநுபபத்தே:' என்கிற ஸூத்ரத்தால் ஸத் ஶப்த வாச்யனான ப்ரஹ்மத்துக்கு உத்பத்திகளில்லை யென்று சொல்லியாகிவிட்டபடியால், தீக்ஷிதர் சொன்னபடி இருக்குமானால் 'நாத்மாஶ்ருதே:' என்கிற ஸூத்ரம் புநருக்தியாகும். ஆனதால், ஜிஜ்ஞாஸ்யமாகச் சொல்லப்பட்ட ப்ரஹ்மம் 'நாத்மாஶ்ருதே:' என்கிற விடத்தில் சொல்லப்பட்ட ஆத்மாவும் ஒன்றாகாது. ஆனால் அதிகாரியான ஜீவன்தான் ஆத்மசப்தத்தால் விசாரிக்கப்பட்டது.

தீக்ஷிதர் :—ஆத்ம சப்தம் ஏகவசநத்தால் சொல்லப்பட்டிருப்பதால், எங்கள் ஸித்தாந்தத்துக்கே அநுகுணமாக இருக்கிறது. அப்படியிருக்க, ப்ரஹ்மத்தை விட்டு வ்யதிரிக்தமானது ஜீவன் என்று எப்படிச் சொல்வது?

ஸு. ஸ்வாமி :—இது ஜாத்யேகவசநம்.

இத்துடன் காலாதீதமாகி விட்டதால், பூபாலன் ஸபையை மறுதினத்துக்கு ஒதுக்கிவைக்க, கதாதரபுரம் ஸ்வாமியும் மேற்கொண்டு தன் பக்ஷத்தை மறுநாள் உபபாதிப்பதாக விடைபெற்றுச் சென்றார். [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீ ஶடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேஶிகாய நம:

நற்போது போக்கு

[பெரிய பிராட்டியார் திருவவதாரம்]

[ஸம்புடம் 8, 12-ம் ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ உப. K. ஸுதர்சநாசார்யர், தமிழ்ப் பண்டிதர், பெருமாள்கோவில்]

இவ்விதமாய் இருதிறத்தாரும் ஊக்கங்கொண்டு பாற்கடலைக் கடைந்து வருகையில், அதனின்றும் ஹவிஸ்ஸுக்கு இருப்பிடமான ஸகல தேவதைகளாலும் பூஜிக்கத்தகுந்த காமதேநு உண்டாயிற்று. அதைக் கண்டு யாவரும் வியந்து மகிழ்ந்தனர். பிறகு ஸகலலோக மோஹினியான வாருணீதேவி தோன்றினள். பின்பு பரிமளம் மிக்க பாரிஜாதமும், ரூபலாவண்ய விலாஸங்களுள்ள அப்ஸர ஸ்த்ரீகளும், அதற்குப் பிறகு லோகாநந்தகரனை *சந்த்ரனும் உண்டானர்கள். அந்தச் சந்த்ரனை ருத்ரமூர்த்தி எடுத்துத் தலையில் சூடிக் கொண்டார். பின் அக்கடலினின்றும் விஷம் தோன்றிற்று. அதைச் சிவனும் நாகேந்த்ரர்களும் க்ரஹித்துக்கொண்டனர். அப்பால், பகவதம்ஶமான தந்வந்த்ரி யென்னும் தேவன், வெண்மையான வஸ்த்ரமும் பூமாலையும் தரித்துக் கொண்டு, அம்ருதம் நிறைந்த ஒரு கமண்டலத்தைக் கையில் ஏந்திக்கொண்டு திருப்பாற்கடலினின்றும் தோன்றினன். அவனைக் கண்டு தேவாஸுரர்கள் யாவரும் பெருமகிழ்ச்சி யுற்றனர். பின்பு, அத்யத்புதமான திவ்ய காந்தி வீச, மலர்ந்த செந்தாமரை மலரை ஆஸநமாகக்கொண்டு, கமல மலரை இரு கரங்களிற் கொண்டு, ஜகந்மாதாவான பெரிய பிராட்டியார் திருவவதாரம் செய்தார். அத்தேவியைத் தர்ஶித்துப் பரம ஸந்தோஷயுக்தராய் மஹர்ஷிகளெல்லாம் ஸ்ரீ ஸூக்தங்களைப் பாடித் துதித்தனர். கந்தர்வர்கள் கீதங்கள் பாடினர்கள். அப்ஸர ஸ்த்ரீகள் நடனம் செய்தார்கள். கங்காதேவி ஒரு பெண் வடிவங் கொண்டு பிராட்டியினிடம் வந்து தன் தீர்த்தத்தைக் கொண்டு அவளுக்குத் திருமஞ்ஜநம் செய்தாள். திசையானைகள் புண்ய நதிகளிலிருந்து தீர்த்தங்கள் கொணர்ந்து பிராட்டிக்கு அபிஷேகம் செய்தன. க்ஷீராப்தி ஒரு புருஷ ரூபம் தரித்துத் தாயாருக்குத் தாமரை மாலையை ஸமர்ப்பித்தது. விச்வகர்மா நவரத்ந மாலைகளைக் கொணர்ந்து தாயார் திருமேனியிலே சாத்தினன். இவ்விதமாய் அவரவர்கள் செய்யும் கைங்கர்யங்களை பிராட்டி அன்புடன் ஏற்றுக்கொண்டு, 'பஶ்யதாம் ஸர்வதேவாநாம் யயௌ வக்ஷஸ்ஸ்தலம் ஹரே:' என்றபடி ப்ரஹ்மா முதலிய தேவர்கள் பார்த்துக்கொண்டிருக்கச்செய்தே, தன் திருவடிகளின் செம்பஞ்சுக் குழம்பின் சுவடுகள் விளங்கப் பெருமாளின் திருமார்பில் ஏறி யெழுந்தருளியிருந்தாள்.

---

* 'சந்த்ரமா மநஸோ ஜாத:' என்று ஆதியில் எம்பெருமான் ஹ்ருதயத்தினின்றும் உதித்த சந்த்ரனுக்கு இரண்டு ரூபங்கள். அவற்றுள் ஒன்று சிவனுக்கு ஶிரோ பூஷணமா யமைந்தது. மற்றொன்று உலகத்துக்கு வெளிச்சம் தருவது. பாற்கடலி லுதித்த சந்த்ரனையே ஶிவன் ஶிரோ பூஷணமாய்க் கொண்டா னென்றறிக.

பின்பு எம்பெருமானுடைய வக்ஷஸ்தலத்தில் வீற்றிருந்த பெரியபிராட்டியார் தேவர்களைக் குளிரக் கடாக்ஷித்தாள். அதனால் தேவர்கள் மனத்துயரம் நீங்கி மகிழ்ச்சி யுற்றார்கள். விஷ்ணுகாருண்ய தூரர்களான பிராட்டியின் கடாக்ஷம் பெறாத அஸுரர் மிகுந்த மனத்துயரம் அடைந்து மெலிந்தார்கள். இப்படியிருக்க, தைத்யர்கள் தந்வந்த்ரியின் கையிலிருந்த அம்ருத கலசத்தைப் பலாத்காரமாய்ப் பிடுங்கிக்கொண்டார்கள். அப்போது க்ஷீராப்திநாதன், ‘விஞ்சை வானவர் சாரணர் சித்தர் வியன் துதிசெய்யப் பெண் உருவாகி’ அஸுரர்களை மயக்கி வஞ்சித்து, அஞ்சுவை யமுதத்தை அமரர்களுக்குப் பகிர்ந்தளித்தான். பகவத் க்ருபையினால் கிடைத்த அந்த அம்ருதத்தை அமரர்கள் பானம்பண்ணி, அதனால் மிகுந்த பலத்துடன் விளங்கினார்கள். அஸுரர்கள் அம்ருதம் இழந்ததனால் மிகுந்த சீற்றங்கொண்டு பல்வகைப் படைக்கலங்களையும் தாங்கி, நிர்ஜரர்களான தேவர்களுடன் போர்புரியத் தொடங்கினர். அப்போது அம்ருதம் காரணமாகத் தேவாஸுரர்களுக்குள் பெரும்போர் நடந்தது. அப்போரில் அம்ருதம் உண்டதனால் வலிமையும் ஊக்கமும் கொண்ட தேவர்கள் அஸுரர்களைப் போரில் புறங்காட்டி ஓடும்படி செய்யவே, அவர்கள் யாவரும் நடுக்க முற்றுப் பாதாளலோகத்தில் போய்ப் புகுந்தனர். பின்னர், இந்திரனுள்ளிட்ட தேவர்குழா மெல்லாம் இந்திரை கேள்வனை வணங்கி வழிபட்டுத் துதித்து, அவனிடம் விடைபெற்றுக்கொண்டு முன்போலவே தேவராஜ்யத்தை அனுபவித்துக்கொண்டு ஸுகமாக வாழ்ந்திருந்தார்கள். ஸூர்யன் முதலான சுடர்களும் தத்தம் தொழிலை மாறாது செய்துவந்தன. ஸகல ஜனங்களும் தர்ம புத்தி யுடையவர்களாய் வாழ்ந்துவந்தார்கள். மூவுலகும் லக்ஷ்மீ கடாக்ஷம் பெற்று வாழ்ந்திருந்தன.

அப்போது ஸ்வர்க்கத்தில் தேவராஜ்யம் பெற்றுத் திவ்ய ஸிம்ஹாஸநத்தில் வீற்றிருந்த தேவேந்த்ரன், லக்ஷ்மீகடாக்ஷத்தினால் தனக்கு ஸகலைச்வர்யங்களும் மீண்டும் வந்ததை உன்னி, ஸ்ரீ தேவியைக்குறித்துப் பின்வருமாறு ஸ்தோத்ரம் செய்தான்:—

𑌶𑍍𑌰𑍀 𑌪𑌰𑌾𑌶𑌰 𑌉𑌵𑌾𑌚—

𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑌨𑌗𑌤𑌃 𑌶𑌕𑍍𑌰𑌃 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌤𑍍𑌰𑌿𑌦𑌿𑌵𑌂 𑌪𑍁𑌨𑌃 ।
𑌦𑍇𑌵𑌰𑌾𑌜𑍍𑌯𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑍋 𑌦𑍇𑌵𑍀𑌂 𑌤𑍁𑌷𑍍𑌟𑌾𑌵𑌾𑌬𑍍𑌜𑌕𑌰𑌾𑌂 𑌤𑌤𑌃 ॥ 1

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌉𑌵𑌾𑌚—

𑌨𑌮𑌸𑍍𑌯𑍇 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌜𑌨𑌨𑍀𑌮𑌬𑍍𑌜𑌸𑌮𑍍𑌭𑌵𑌾𑌮𑍍 ।
𑌶𑍍𑌰𑌿𑌯𑌮𑍁𑌨𑍍𑌨𑌿𑌦𑍍𑌰𑌪𑌦𑍍𑌮𑌾𑌕𑍍𑌷𑍀𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌵𑌕𑍍𑌷𑌃𑌸𑍍𑌥𑌲𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌮𑍍 ॥ 2

𑌪𑌦𑍍𑌮𑌾𑌲𑌯𑌾𑌂 𑌪𑌦𑍍𑌮𑌕𑌰𑌾𑌂 𑌪𑌦𑍍𑌮𑌪𑌤𑍍𑌰𑌨𑌿𑌭𑍇𑌕𑍍𑌷𑌣𑌾𑌮𑍍 ।
𑌵𑌨𑍍𑌦𑍇 𑌪𑌦𑍍𑌮𑌮𑍁𑌖𑍀𑌂 𑌦𑍇𑌵𑍀𑌂 𑌪𑌦𑍍𑌮𑌨𑌾𑌭𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌮𑌹𑌮𑍍 ॥ 3
𑌤𑍍𑌵𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑍍𑌵𑌧𑌾 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 𑌸𑍁𑌧𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌲𑍋𑌕𑌪𑌾𑌵𑌨𑍀 ।
𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾 𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌃 𑌪𑍍𑌰𑌭𑌾 𑌭𑍂𑌤𑌿𑌰𑍍𑌮𑍇𑌧𑌾 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀 ॥ 4
𑌯𑌜𑍍𑌞𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌮𑌹𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌗𑍁𑌹𑍍𑌯𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌚 𑌶𑍋𑌭𑌨𑍇 ।
𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌚 𑌦𑍇𑌵𑌿 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌫𑌲𑌦𑌾𑌯𑌿𑌨𑍀 ॥ 5

ஶ்ருணு நீசஸுகீ த்ரயீவாதஞா ஷண்ணுதி ஸ்வயமேவ ஹி ।
ஸாளக்ராமஸிலா ஜன்மதை ஸர்வமேஷதே தேவ ஷிவ ஷுதிக ॥ 6

கா ஷூவஜ்ஞா கரஷதெ தெவி வேங்கமஷுக்ஷ ஷயம் வஸ ॥
ஸஸ்ஜோஷ தெவதெவஸ்ய யொ மதிக்ஞ் மஷா ஷ தா ॥ 7

ஸ்வயா தெவி வரிதக்ஷம் ஸக்ஷ ஷாவ நத்ரயஷ ।
வி நஷுவரூய ஷேவக் ஸ்வயேஷா நீம் ஸஷேயிதஷ ॥ 8

ஷாரா வத்ராஷூஷாஷமாஷ ஸாஷூ கா ந்ய ய நாஷிகஷ ।
ஷவதெத்ய த நஷாஹாஷெ நித்யம் ஸ்வகேஷணா நூணாஷ ॥ 9

ஶரீராஷொஷ்க தெஷூயது ஷரிவக்ஷ ஷயஷூவஷ ।
தெவி ஸ்வரூஷ ஷஷஷா நாம் வாஷஷாணாம் நஷஷஷஷ ॥ 10

ஸ்வம் ஷதா ஸவஷொகா நாம் ஷவஷெவோ ஹரிஃ விதா ।
ஸ்வயெத லிஷ்ணா நா ஷரம்ப ஜஷஷ்யாவும் ஷரா ஷரஷ ॥ 11

ஷா நஃகோரஶம் தயா ஷொஷும் ஷா ஷூ ஷம் ஷா வரிஷ்ஷஷ ।
ஷா ஶரீரம் கஷத்ரும் ஷ த்யஜெயா ஷூவஷுவாவநி ॥ 12

ஷா வத்ரஷு ஷா ஸாஷ்ஷஷ ஷ ஷா வஶஷ ஷா விஹஷஷணஷ ।
த்யஜெயா ஷஷ தெவஸ்ய விஷ்ணோ வஷஸ்ஷூஷஷயெ ॥ 13

ஸதெத்ய ந ஶளஷ ஸத்யாஷ்யாம் தயா ஶீஷாஷிஷி ஷஷணைஃ ।
த்யஜத்யெதெ நராஸ்ஷ்த்ஃ ஸக்த்யா யெ ஸ்வயாஷஷெ ॥ 14

ஸ்வயாவஷொகிதா ஸ்ஷத்ஃ ஶீஷாஷெத்ய ஸகஷெ ஷஷணைஃ ।
யதெஸுஷயெஷுஷு யாஜ்ஞெ வஷாஷா நிஷணா ஸவி ॥ 15

ஸஷூவத் ஸஷணீ யந்த்ஃ ஸகஷு ந ஸூ சபாஷிஷு ।
ஸ ஶஷஸ்ஷ விக்ஷ ஷொ யம்ஸ்வம் தெவி நிரீக்ஷஸெ ॥ 16

ஸதெத்யா வெஷணத்ஷயாஷி ஶீஷாஷத்ய ஸகஷா ஷணாஃ ।
வரிஷீ ஜஷஸாதீ யஸஸ்வம் விஷ்ணு வஷூஷெ ॥ 17

ந தெ வணஷிதம் ஶக்தா ஷணாஷு ஜிஷாஷவி வெயஸஃ ।
வூவீஷ தெவி வஷாக்ஷி ஷாஷஷாம் ஷூஷாக்ஷீஃ கஷா ஷந ॥ 18

ஸ்ரீவராஶர உவாச —

ஸவம் ஸ்ரீஸம்ஷூதா ஸக்யக் ஷூாஷா ஷஶஸ்தா ஶதக்ஷ தாஷ ।
வஶ்யதாம் ஸவ ஷெவா நாம் ஸவஷஷ த ஷூதா ஷஜ ॥ 19

ஸ்ரீராவாச —

வரிதஷ்ஷாஷி தெவெஶ ஷொாத்ரேணா தெந தெ ஹரெ ।
வரம் வூணீஷ்வ யஸ்ஷிஷொ வரஷாஹம் தவாகதா ॥ 20

இந்த்ர உவாச —

வரஷா யஷி தெ தெவீ வராஷெ ஷா யஷி ஷாவஷ்ஷஷ ।
த்ரைலொக்யம் ந ஸ்வயா த்யாஜ்ய தெஷஷெஷூ வரஃவரஃ ॥ 21
ஷொத்ரேண யஸ்ஷயெதெந ஸ்வாம் ஷொஷ்யத்யஷி ஸம்ஷவெ ।
ஸ ஸ்வயா ந வரித்யாஜ்யொ ஷிதீயொஷு வரொ ஷஷ ॥ 22

ஸ்ரீபராசர:—

த்ரைலோக்யம் புநரப்யேவம் ந ஸந்த்யக்ஷ்யாமி வாஸவ ।
தத்தோ வரோ மயாऽயம் தே ஸ்தோத்ராராதந துஷ்டயா ॥ 23
யஸ்து ஸாயம் ததா ப்ராத: ஸ்தோத்ரேணாநேந மாநவ: ।
மாம் ஸ்தோஷ்யதி ந தஸ்யாஹம் பவிஷ்யாமி பராங்முகீ ॥ 24

ஸ்ரீபராசர:—

ஏவம் ததௌ வரௌ தேவீ தேவராஜாய வை புரா ।
மைத்ரேய ஸ்ரீர்மஹாபாகா ஸ்தோத்ராராதநதோஷிதா ॥ 25
ப்ருகோ: க்யாத்யாம் ஸமுத்பந்நா ஸ்ரீ: பூர்வமுததே: புந: ।
தேவதாநவயத்நேந ப்ரஸூதாऽம்ருதமந்தநே ॥ 26
ஏவம் யதா ஜகத்ஸ்வாமீ தேவதேவோ ஜநார்தந: ।
அவதாரம் கரோத்யேஷா ததா ஸ்ரீஸ்தத்ஸஹாயிநீ ॥ 27
புநஶ்ச பத்மாத் ஸம்பூதா யதாऽऽதித்யோऽபவத்தரி: ।
யதா ச பார்கவோ ராமஸ்ததாபூத்தரணீ த்வியம் ॥ 28
ராகவத்வேऽபவத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ணஜந்மநி ।
அந்யேஷு சாவதாரேஷு விஷ்ணோரேஷாऽநபாயிநீ ॥ 29
தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ ।
விஷ்ணோர்தேஹாநுரூபாம் வை கரோத்யேஷாऽऽத்மநஸ்தநும் ॥ 30
யஶ்சைதச்ச்ருணுயாஜ்ஜந்ம லக்ஷ்ம்யா யஶ்ச படேந்நர: ।
ஸ்ரியோ ந விச்யுதிஸ்தஸ்ய க்ருஹே யாவத்குலத்ரயம் ॥ 31
பட்யதே யேஷு சைவேஷா க்ருஹேஷு ஸ்ரீஸ்தவோ முநே ।
அலக்ஷ்மீ: கலஹாதாரா ந தேஷ்வாஸ்தே கதாசந ॥ 32
ஏதத்தே கதிதம் ப்ரஹ்மந் யந்மாம் த்வம் பரிப்ருச்சஸி ।
க்ஷீராப்தௌ ஸ்ரீர்யதா ஜாதா பூர்வம் ப்ருகுஸுதா ஸதீ ॥ 33

இதி ஸகலவிபூத்யவாப்திஹேது:
ஸ்துதிரியமிந்த்ரமுகோத்கதா ஹி லக்ஷ்ம்யா: ।
அநுதிநமிஹ பட்யதே ந்ருபிர்யை-
ர்வஸதி ந தேஷு கதாசிதப்யலக்ஷ்மீ: ॥ 34

[இதி ஸ்ரீவிஷ்ணுபுராணே ப்ரதமாம்ஶே ஸ்ரீஸ்துதிர்நாம நவமோऽத்யாய:]

[இதன் பொருள்] ஸகல லோகங்களுக்கும் தாயாராய், திருப்பாற் கடலில் திருவவதரித்தவளாய், மலர்ந்த தாமரைப் பூவை ஒத்த திருக்கண்கள் உடையவளாய், பெருமாளுடைய திருமார்பில் எழுந்தருளி யிருக்கிறவளுமான ஸ்ரீ தேவிக்குத் தண்டன் ஸமர்ப்பிக்கிறேன். தாமரை மலரில் வீற்றிருப்பவளும், தாமரை மலரைத் திருக்கைகளில் தரித்தவளும், தாமரை மலரை யொத்த திருக் கண்களை யுடையவளும், தாமரை மலர் போன்ற திருமுகமண்டல முடைய வளும், உந்தியில் தாமரை பூத்தவனுடைய திருவுள்ளத்துக்கு உவப்பானவளு மான ஸ்ரீ தேவியை ஸேவிக்கிறேன். உலகங்களைப் பரிசுத்தம் செய்தருள்கிற

தாயே! ஸித்தியும் ஸ்வாஹையும் ஸுதையும் ஸ்வதையும் ஸந்தியும் ராத்ரியும் ப்ரபையும் பூதியும் மேதையும் ச்ரத்தையும் ஸரஸ்வதியும் எல்லாம் நீயே. ஸகல மங்கள ஸ்வரூபியாகிய தாயே! யஜ்ஞவித்யை யென்கிற கர்ம மீமாம்ஸையும், மஹா வித்யை யென்கிற இந்த்ர ஜால வித்யையும், குஹ்ய வித்யை யென்கிற மந்த்ர வித்யையும், மோக்ஷம் கொடுக்கவல்ல ஆத்ம வித்யை யென்கிற வேதாந்த வித்யையும் நீயே. தர்க்க வித்யையும், வேத வித்யையும், க்ருஷி கோ ரக்ஷண வாணிஜ்யாதி வித்யைகளும், தண்ட நீதி வித்யையும் நீயே. இப்படி ஶாந்தங் களாயும் அஶாந்தங்களாயு மிருக்கிற ரூபங்களைக் கொண்டு நீ மூன்று லோகங்களையும் நிறைத்திருக்கிறாய். தாயே! ஸர்வ லோகேசுவரீ! நீயல் லாமல் மற்றும் யார் ஸகல யஜ்ஞ ஸ்வரூபமாய், மஹா யோகீந்த்ரர்களுக்கும் த்யானித்து அறியதக்கதான தேவ தேவனான கதாதரனுடைய திருமேனியில் வீற்றிருக்க மாட்டுவார்கள்? லோக மாதாவே!.உன் கடாக்ஷ மிழந்தபோது மூன்று லோகங்களும் நாஶமடைந்தவைகள் போலாகி, மீண்டும் உன் கடாக்ஷம் பெற்றபடியால் ஸௌபாக்யங்களைப் பெற்றிருக்கின்றன. மஹாநுபாவையான தாயே! க்ருபா ரஸம் நிறைந்த உன் கடாக்ஷ வீக்ஷணத்தாலே ப்ராணிகளுக்குப் புத்ர மித்ர களத்ராதிகளும், க்ருஹ க்ஷேத்ர தந தாந்ய வாஹநாதிகளும் எப் போதும் உண்டாகின்றன. எம்பெருமாட்டி! உன் கடாக்ஷ முண்டான புருஷர்களுக்குத் தேஹாரோக்யமும் அதிகாரமும் ஶத்ரு ஜயமும் ஸுகமும் கிடைப்பது அருமையன்று. அம்மா! நீ ஸமஸ்த ப்ரபஞ்சங்களுக்கும் தாய். தேவதேவனான நாராயணன் தந்தை. நீங்கள் இருவருமே சேர்ந்து சராசர ஸ்வரூபமான இந்த ப்ரபஞ்ச மெல்லாம் வ்யாபித்திருக்கிறீர்கள். திருமால் தன் திருமார்பில் வீற்றிருக்கும் தாயே! அடியோ முடைய புத்ர மித்ர வர்க்கங் களையும், பசுக் கணங்களையும், பூஷணங்களையும், ஒரு நாளும் பிரியாமல் இருந் தருள வேண்டும். ஸகலத்தையும் பரிசுத்தம் பண்ணவல்ல தாயே! அடியே முடைய தந கோஶத்தையும், தொழுவத்தையும், க்ருஹங்களையும், பரிகரங்களை யும், ஶரீரத்தையும், களத்ரத்தையும் ஒரு நாளும் பிரியாமல் இருந்தருள வேண் டும். நிர்மலையான தாயே! உனது கடாக்ஷத்துக்குத் தூரமானபோது ஜநங்கள் ஸத்ய ஶௌச ஶீலாதி ஸாத்விக குணங்கள் இல்லாமற் போவார்கள். குண ஹீநரானாலும், உன் கடாக்ஷத்துக்குப் பாத்ரரான புருஷர், அப்போதே ஸௌஶீல்யாதி ஸகல மஹா குணங்களும், தந தாந்யாதி ஸம்ருத்தியும் ப்ரபுத்வ மும் பெற்றுவாழ்வார்கள். ஸ்ரீ விஷ்ணு வல்லபையான தாயே! உன் கருணா கடாக்ஷத்துக்கு எவன் இலக்கானவனோ, அவனே ச்லாக்யனும், குணவானும், புண்யவானும், புத்திமானும், சூரனும், பராக்ரமவானு மாவான். ஜகத் ரக்ஷகியே! நீ உபேக்ஷை பண்ணினால் அவனிடத்திலே உண்டான ஸத்ய ஶமதமாதி ஸகல ஸத் குணங்களும் துர்க்குணங்களாய் மாறிவிடும். பத்மாக்ஷி! உன் திருக்கல்யாண குணங்களை ஸரஸ்வதீ வல்லபனான ப்ரஹ்ம தேவனாலும் துதிக்கமுடியா தென்றால் அடியேன் எம்மாத்ரம்? அடியோங்களிடம் க்ருபை கூர்ந்து ஒருபோதும் எங்களை விட்டு விடாமல் நீ ரக்ஷித்தருள வேண்டும்" என்று தேவேந்த்ரன் ப்ரார்த்தித்ததைக் கேட்டு பிராட்டி புரந்தரன் முன் எழுந் தருளி, ஸகல தேவதைகளும் கேட்கும்படியாக,

"ஓ! தேவேந்த்ரனே! நீ செய்த ஸ்தோத்ரத்துக்கு உவந்து உனக்கு வரங்கொடுக்க வந்தேன்; வேண்டிய வரங்களைக் கேள்" என்று அருளிச் செய்ய, அமரர் தலைவன் கமலையை வணங்கி,

"தாயே! அடியேன் உன் க்ருபா கடாக்ஷத்துக்குப் பாத்ரனாகும்படி க்ருபை கூர்ந்து வரந்தரும்படி எழுந்தருளினதனால், நீ த்ரிலோகத்தையும் விடாமல் எழுந்தருளியிருக்கவும், எவனாகிலும் பக்திபுரஸ்ஸரமாய் இந்த ஸ்தோத்ரத்தினாலே உன்னைத் துதித்தால் அவனை நீ ஒருநாளும் கைவிடாமல் ரக்ஷித்தருளவும் வேண்டும்" என இரண்டு வரங்களைக் கொடுத்தருளும்படி ப்ரார்த்தித்தாள்.

பிராட்டியாரும் இந்த ப்ரார்த்தனையைத் திருவுள்ளம்பற்றித் தேவராஜனைப் பார்த்து, "அமரேந்த்ரா! நீ விரும்பியபடியே நீ ஆள்கிற லோகங்களை விட்டு நான் விலகுவதில்லை. அன்றியும்: எவன் தினந்தோறும் காலை மாலைகளில் இந்த ஸ்தோத்ரத்தினாலே என்னைத் துதிக்கிறானோ, அவனை ஒரு நாளும் நான் உபேக்ஷை செய்யாமல் கடாக்ஷிக்கிறேன்" என்று இரண்டு வரங்களையும் தந்தருளினாள்.

[ஸ்தோத்ரத்தின் பலச்ருதி]

ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் இந்தத் திருவவதாரத்தை எவன் பக்தியோடு பாராயணம் செய்கின்றானோ; அல்லது எவன் பக்தியோடு கேட்கின்றானோ, அவர்கள் மாளிகையில் மூன்று தலைமுறை வரையில் பெரியபிராட்டியார் பிரியாமல் எழுந்தருளி யிருப்பள். எந்தக் க்ருஹங்களிலே இந்த ஸ்ரீதேவியின் ஸ்தோத்ரம் நித்யமாய்ப் படிக்கப்படுமோ, அந்த மாளிகைகளில் கலஹத்துக்கு ஆதாரமான தாரித்ர்யம் எப்போதும் சேராது; அவர்கள் ஒருகாலும் அசுபத்தை யடையாமல் ஸர்வாபீஷ்டங்களையும் அடைந்து பெருமையுடன் வாழ்ந்திருப்பார்கள்.

ஸம்பூர்ணம்

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

பட்டர் பரவும் பரமன்

[ஸ்ரீ. உ. வே. பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரே. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

ஶ்ரீபராஶரபட்டார்ய: ஶ்ரீரங்கேஶபுரோஹித: ।
ஶ்ரீவத்ஸாங்கஸுத: ஶ்ரீமான் ஶ்ரேயஸே மேऽஸ்து பூயஸே ॥

[ஸ்ரீரங்கநாதனாகிய நம்பெருமாளுக்குப் புராணம் வாசிக்கும் கைங்கர்யம் உடையவரும், ஸ்ரீவத்ஸாங்கமிச்ரர் என்னப்படும் கூரத்தாழ்வானுடைய திருக்குமாரரும், ஸ்ரீ வைஷ்ணவ ஞான லக்ஷ்மி எப்போதும் பொருந்தப் பெற்றவரு

மான ஸ்ரீ பராசரபட்டர் என்னும் ஸ்வாமி அடியேனுக்கு மேன்மேலும் மிகவும் அதிகமான நன்மையை அளிக்கக் கடவர்.]

வந்தே கோவிந்ததாதௌ முநிமத மநவே லக்ஷ்மணார்யம் மஹாந்தம்
த்யாயேயம் யாமுநார்யம் மம ஹ்ருதி தநவே ராமமிஶ்ரம் ஶ்ரயேயம் ।
பத்மாக்ஷம் ப்ரேக்ஷிஷீய ப்ரதமமபி முநிம் நாதமீடே ஶடாரிம்
ஸ்தௌமி ப்ரேக்ஷேய லக்ஷ்மீம் ஶரணமஶரண: ஶ்ரீவரம் ஸம்ஶ்ரயேஹம் ॥

[கோவிந்த பட்டரையும் அடியேன் தந்தையான கூரத்தாழ்வானையும் வந்தனம் செய்கிறேன். அதன் பிறகு, ஸ்ரீ பாஷ்யகாரரை எப்போதும் சிந்திக்கக் கடவேன். பெரிய நம்பியைத் தியானம் செய்வேன். ஆளவந்தாரை ஹ்ருதயத்தில் வைக்கக்கடவேன். மணக்கால் நம்பியை அடையக்கடவேன். உய்யக் கொண்டாரைப் பார்க்கக்கடவேன். ஸம்ப்ரதாயத்திற்குப் ப்ரதமாசாரியராகிய ஸ்ரீமந் நாதமுனியைத் துதிக்கிறேன். சடகோபராகிய நம்மாழ்வாரைப் புகழ்கிறேன். இன்னமுதத் திருமகளாகிய இலக்குமியைப் பார்க்கிறேன். வேறு சரணமில்லாதவனாய் ச்ரிய: பதியாகிய எம்பெருமானைச் சரணாகதி செய்வேன்.]

'வானிட்ட கீர்த்தி வளர் கூரத்தாழ்வான் மகிழவந்த, தேனிட்டத்தார் நம்பெருமாள்' குமாரர் பராசர பட்டர். அவ்வாசாரிய சிகாமணி பரமனைப் பரவு மாற்றை எடுத்தியம்ப முற்படுகின்றேன். பேரறிஞர் குற்றங் களைந்து குணமே கொள்வாராக.

'தேனே பாலே கன்னலே யமுதே' என்னும்படியாக அமைந்துள்ளது ஸ்ரீ பராசரபட்டர் திருவாய் மலர்ந்தருளிய ஸ்ரீரங்கராஜஸ்தவம் என்னும் திவ்யஸ்தோத்ரம். இந்த ஸ்தவம், பூர்வ சதகம் என்றும் உத்தர சதகம் என்றும் இரு பகுதிகளை யுடையது. பூர்வ சதகம் நூற்றிருபத்தேழு சுலோகங்கள் கொண்டது; உத்தர சதகத்தின் சுலோகங்களின் எண்ணிக்கை நூற்றைந்து. பூர்வ சதகத்தாலே த்வயத்தின் பூர்வ வாக்கியப் பொருளும், உத்தர சதகத்தாலே உத்தர வாக்கியப் பொருளும் விவரிக்கப் பெற்றுள்ளதாக ஆன்றோர் நிர்வஹிப்பர். இதில் உத்தர சதகத்தின் அறுபதாவது சுலோகம் முதலாக, எம்பெருமானுடைய தசாவதார சரிதங்களை அநுபவிக்கிறார் தனக் குவமையில்லாத பராசரபட்டர். அவற்றுள் 64, 65, 66-ஆவது சுலோகங்கள் மூன்றும் திரு நரசிங்க மூர்த்தியின் வைபவத்தைப் பரக்கப் பேசுகின்றன. அவற்றை முதலிற் காண்பாம்.

'மநுஷ்யத்வ ஸிம்ஹத்வங்களினுடைய இயற்கையான சேர்த்தியழகை ஸேவிக்கின்ற ஜநமானது மநுஷ்ய ஜாதியையோ அல்லது ஸிம்ஹ ஜாதியையோ ப்ரத்தியேகமாகக் கண்டு வெறுப்படையும் என்கிற கருத்தினாலேபோல, சர்க்கரையையும் பாலையும் சேர்க்கின்ற கணக்கிலே இரண்டு திருவுருவங்களையும் ஒன்று புணர்த்துக் கொண்டவராய், அழகிய பிடரி மயிர்களையும் பெரிய கோரப் பற்களையும் உடையவராய், திரு நரசிங்கமூர்த்தியான ஸ்ரீரங்கநாதனைச் சிந்திக்கிறோம்' என்ற பொருளுள்ள

ந்ருஹரிவபுஷோ: யஸ்ய ந்ருணாம் வ்ருத்திகம் வபுர் நாஹ்ருதம்
நரஸ்ய தஹரிம் த்ரஷ்டவ்யைகம் ஸர்வஜநைர் ஜநா: ।
இதி கில ஸிதாக்ஷீர ந்யாயேந ஸங்கடிதாங்ககம்
ஸ்புடஸடஜடா தம்ஷ்ட்ரம் ரங்கேந்த்ர ஸிம்ஹநராவஹே ॥

என்பது ஆதி சுலோகம். இதில் நரசிங்க ரூபத்தில் அமைந்துள்ள சேர்த்தி யழகைக் கண்டு ஸேவிக்கும் எல்லா ஜனங்களும், "இனி நாம் பார்த்தால் இவ் விதமாக இரு வடிவும் சேர்த்தியைக் காண்க வேண்டுமேயொழிய, தனியாக நர ரூபத்தையும், தனியாக ஸிம்ஹ ரூபத்தையும் பார்க்கலாகாது. அவற்றைத் தனித்தனியே கண்டால் வெறுப்பே உண்டாகும். தனித்தனியான அவ் வடிவுகளில் யாதொரு அழகும் இல்லை" என்று ஈடுபடும். சர்க்கரையும் பாலும் கலந்தாற் போலுள்ள அழகிய அவயவச் சேர்த்தி யுடையவனும், விளங்குகின்ற வேரி மயிர்களை யுடையவனும், பெருத்த கோரப் பற்களை யுடையவனுமாக விளங்கும் திரு நரசிங்கமூர்த்தி ரங்கநாதனைத் தொழுகிறோம் என்கிறார் இதில். "இவையா! பிலவாய் திறந்தெரி கான்ற, இவையா! எரி வட்டக் கண்கள் – இவையா!, எரிபொங்கிக் காட்டும் இமையோர் பெருமான், அரிபொங்கிக் காட்டு மழகு. [நான்முகன் திருவந்தாதி 21]; "அழகியான் தானே அரியுருவன் தானே, பழகியான் தாளே பணிமின்." (ஷை 22) என்று ஆழ்வார் பணித்தபடி, இரணியன் வேண்டிக்கொண்ட வரத்திற்குத் தகுதியாக எம்பெருமான் நரங்கலந்த அழகிய சிங்கமாக ஒரு விலக்ஷண ரூபத்தோடு அவதரித்து அத்திருவுருவை 'அழகிய சிங்கர்' என்றே கொண்டாடுமாறு ஆகிவிட்டது. "ஆடியாடி அகங்கரைந்து இசை, பாடிப்பாடிக் கண்ணீர் மல்கி, நாடிநாடி நரசிங்கா வென்று, வாடிவாடுமிவ் வாணுதலே" என்பது நம்மாழ்வார் திருவாய்மொழி [2–4–1] "என் சிங்கப்பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே" [திருவாய்மொழி 2–8–9]; "கிளரொளியால் குறைவில்லா அரியுருவாய்க் கிளர்ந்தெழுந்து" [திருவாய்மொழி 4–8–7]; "கோளரி மாதவன் கோவிந்த னென்பானோர், காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீ நான்" [தையொரு திங்கட் பாமாலை 6–1]; "பரியனாகிவந் தவுண னுடல்கீண்ட அமரர்க்கு அரிய வாதிப்பிரான் அரங்கத் தமலன் முகத்து, கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப், பெரியவாய கண்கள் என்னைப் பேதைமை செய்தனவே" [அமலனாதிபிரான்–8]; "நாத்தழும்ப நான்முகனு மீசனுமாய் முறையாலேத்த அங்கோராளரியா யிருந்தவம் மானதிடம்" [பெரிய திருமொழி 1–7–8]; "தெள்ளிய சிங்கமாகிய தேவைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே (ஷை 2–3–8); "அடலடர்த்தன் றிரணியனை முரணழிய அணியுகிரால், உடலெடுத்த பெருமானுக் கிழந்தேனென் னொளிவளையே" [ஷை 8–4–4] 'வரங்கருதித் தன்னை வணங்காத வன்மை, உரங்கருதி மூர்க்கத்தவனை—நரங் கலந்த, சிங்கமாய்க் கீண்ட திருவன , யிணையே, அங்கண்மா ஞாலத் தமுது" [இயற்பா, இரண்டாம் திருவந்தாதி—84] என்ற பொய்யில் பாடல்கள் இவண் அநுஸந்தேயம்.

“ பரம பாகவத விரோதியான இரணியாஸுரனிடத்தில் துவேஷத்தால் உண்டாகின்ற திருக்கண்களில் அக்கினியை அணைக்கும் பொருட்டுப் பரபரப்புக் கொள்கின்ற திருமாமகளின் திருவாயிலிருந்து உமிழப்பெற்ற தாம்பூல கண்டூஷம் போன்ற நகங்களினால் பிளக்கப்பட்ட அப்பகைவனது ரக்த தாரைகளினால் நனைக்கப்பட்ட பிடரி மயிர்த்திரளோடு கூடிய திருத்தோள்களையுடைய திரு நரசிங்கமூர்த்தி இத்திருவரங்கத்தில் நமது பாவங்களைத் தொலைத்தருளுகிறார் ” என்ற பொருளுள்ள

ஶிஷ்ராணசெஷொத்யந்நய நவ நவஹ்ரி வ்ருஶ்சந
ஹ்ருஜ்ஜ்ஞக்ஷீவக்த்ர வ்ருஷிதவய்யாமண்ணுஷ்ஷஸ்வொஷசை: ।
நவக்ஷ்ணாரா திக்ஷ தஜவடிமெரஸாவ்ருதஸடா
ஹடாவஸெலா ரஸெ உரரிதயிஹ வஸஂஸெஂ அவஷ ந: ॥

என்ற சுலோகம் அடுத்தது. இரணியனுடைய மார்பில் நரசிங்கமூர்த்தியின் திருவுகிர் பட்டவாறே உதிர வெள்ளம் பெருகக் தொடங்கிற்று. “பொன்னன் பைம்பூண், நெஞ்சிடந்து குருதியுக உகிர்வேலாண்ட நின்மலன்” [பெரிய திருமொழி 3–4–4]; “ உளைய ஒண்திறல் பொன்பெயரோன் தனது உரம் பிளந்து உதிரத்தை, அளையும் வெஞ்சினத்தரி,” [ஷை 4–2–7]; “ இரணியனிலங்கு பூணகலம், பொங்கு வெங்குருதி பொன்மலை பிளந்து பொழிதரும் அருவியொத் திழிய, வெங்கண் வாளெயிற்றோர் வெள்ளிமா விலங்கல் விண்ணுறக் கனல்விழித் தெழுந்தது, அங்ஙனே யொக்க அரியுருவானான் அரங்கமா நகரமர்ந்தானே.” [ஷை 5–7–5]; பைங்கணா ளரியுருவாய் வெருவநோக்கிப் பருவரைத்தோ ளிரணியனைப் பற்றிவாங்கி, அங்கைவா ளுகிர்நுதியா லவனதாகம் அங்குருதி பொங்குவித்தான் [ஷை 6–6–4]; “போரார் நெடுவேலோன் பொன்பெயரோன் ஆகத்தைக் கூரார்ந்த வள்ளுகிரால் கீண்டு — குடல் மாலை சீரார் திருமார்பின் மேல்கட்டிச் செங்குருதி, சோராக் கிடந்தானைக் குங்குமத் தோள்கொட்டி ஆரவெழுந்தான் அரியுருவாய்.” [சிறிய திருமடல் 43—44] என்பன இவண் நினைக. ஆச்ரித விரோதி இரணியன். அவன் பக்கல் மாத்ஸர்யத்தால் திரு நரசிங்கனுடைய நேத்ராக்நி மிகவும் பொங்கிக் கிளர்ந்தது. அதனை அடக்கப் பரபரப்புக் கொண்டாள் அலர்மேல்மங்கை. அப்பெரிய பிராட்டியார் தம்முடைய திருப்பவளத்தி லிருந்து தாம்பூல மதுவைக் கொப்பளித்தாள் போலும்; அந்தக் கண்டுஷந்தான் இவ்வாறு உதிர வெள்ளமாகப் பெருகுகின்றதோ வென உத்ப்ரேக்ஷிக்கிறார் உபய வேதாந்த பட்டர். அத்தகைய உதிர வெள்ளத்தால் அபிஷிக்தமான உளை மயிர்களையுடைய திரு நரசிங்கமூர்த்தியான அரங்கநரகப்பன் இந்த ஸ்ரீரங்க விமானத்தில் நமக்கெல்லாம் காட்சி அளித்து நமது பாவங்க ளனைத்தையும் போக்கியருளுகின்றார் என்கிறார் இந்த சுலோக மணியில். இதற்கடுத்தது :—

நவாஹ்ர ஹ்ரஷ்ஷூடவி ஷிஷதி நிஜஹக்த்ர த்ரஹிரஷ:
வ்ருகஷூரா ஷிஷ்ணுஸுவஷிமணவரிணாஹொ தடிதந: ।
விரஸெ வெயத்ரீ ஸஸ்வடித ஸஶா நாயி[illegible]
நரஸிஂஹஸெவ ஷிஹ்ரு ஷஸ ஷிஹ[illegible] ॥ என்பதை

189267

"வரந்தரும் பெருமாளே! ஒன்றுசேர வொட்டாதவைகளாயிருந்த போதிலும், ஆச்ரித விரோதியைத் தொலைக்கவேணும் என்ற ஊற்றத்தினால் மிகவும் பொருந்தின ஸாமாநாதிகரண்யத்தையுடைய நரத்வ ஸிம்ஹத்வங்களை ஏற்றுக்கொள்ளாநின்ற தேவரீர், ஆச்ரித விரோதியான இரணியன் உகிர் நுனியளவால் தொலைக்கப்பட்டபோதிலும், சீற்றத்தினுடைய மிகுதியினால் விஷ்ணுத்வத்திற்காட்டிலும் இரட்டித்த பெருமையையுடையதும் பயங்கரமுமான திருமேனியை யுடையவராய் உலகத்தை நிர்வஹித்தீர்" என்பது இதன் பொருள்.

ஆண்மை சிறந்து அருள் சுரக்கும் பெற்றியதே ஸிம்ஹமாம். இத்தகையதோர் ஸிம்ஹத்தின் திருநாமங்களே நாராயணன், பகவான், புருஷோத்தமன், ப்ரஹ்மம், திருமால் முதலியன. "ஓயா நம் நாரஸிம்ஹவபு: ஸ்ரீமாந் கேசவ: புருஷோத்தம:" என்பது அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை. "நாரஸிம்ஹவபு: ஸ்ரீமாந் கேசவ: புருஷோத்தம:" என்றது ஆயிரநாமம். பரம்பொருளுக்கு உற்றதும் சிறந்ததுமாகிய திருநாமம் ஸிம்ஹம். 'என் சிங்கப்பிரான்' என்று பராங்குசனும், "தெள்ளிய சிங்க மாகிய தேவு" என்று பரகாலனும், 'சீரிய சிங்கம்' என்று கோதையும் இதனை விளக்கியுள்ளார்கள். பரம்பொருள் வேதத்தையும், சுருதி பரம்பொருளையும், ஒருங்கிக் காக்கும் நீர்மையை நோக்கி "ஸிம்ஹவநகுப்தி" (சிங்கவனக் காப்பு) ந்யாயத்தை ஆன்றோர் விரித்தனர். காந்தெங்கும் பரந்து விளங்கும் பரனே விஷ்ணு. அருண்மைப் பன்மையாய்ப் பின்னும் பரந்து விளங்குமவனே மஹாவிஷ்ணு. அம்மஹா விஷ்ணுவின் திருநாமமே ஸிம்ஹம். இந்த ஸிம்ஹமே வ்யாபக தத்துவமாதலின் ஸிம்ஹமாயே உலகளந்தான் என்று வேதம் ஓதிற்று. 'பெருந்தேவு' என்றது சிங்கனுக்கு உற்ற ஓர் செந்தமிழ்த் திருநாமம். மாற்றாரிடத்துச் சீற்றமும் அடியாரிடத்து அருண்மையும் ஒருங்கித் திகழும் செங்கட் சுடர்க் கடவுள் இவனே. இவ்வடிவனே 'அழகன்' என்று இருமாமறையும் புகழும். நிக்ரஹமும் அநுக்ரஹமும் இவனிடத்து ஒருங்கி நிகழ்வன. ஒன்று நிகழுமாறே மற்றொன்றும் நிகழும். அன்னவன் ஸ்ரீமத்த்வமும் ஸிம்ஹீஸ்தந்ய ந்யாய நுட்பமும் நன்கு தெளிதல் வேண்டும். அனைத்தையும் கணிசித்தே 'விஷ்ணுஸிம்ஹவரிணா ஹேதுநா:' என்று நம் பட்டாரகர் விளக்கியருளினார் என்ப.

ஸ்ரீ மேட்டழகிய சிங்கரை இரண்டு சுலோகங்களினால் மங்களாசாஸநம் செய்கிறார் நம் பட்டர். அவையாவன:—

வ்யாவிர்பவந் ஹஸதிவாஸிதஹாஸ்த ஸுதயோஜ்ஜ்வலதவேஷ்ட !
தஸ்மை விஷ்ணவ நரகேஸரிணேவம் ஹாவபாவமவரி விஜ்ரம்ஹிதாய ॥

—(பூர்வசதகம் 46)

[மிகப் பெரியதான விழிவையும் சிறிதாக்கிக்கொண்டு கோபுரத்தின் மீது விளங்காநின்றுள்ளதும், பக்தனென பிருங்கலாதன் பக்கலுள்ள வாத்ஸல்யத்தி

ஞல் வரம்பை மீறி அவதரித்ததும், பரம விலக்ஷணமுமான சத்துருவான இரணியனைத் தொலைக்கவல்ல திரு நரசிங்கத் திருக்கோலத்தைத் துதிக்கின்றேன். ஆகாயத்தளவும் வியாபித்த திவ்யமங்கள விக்ரஹத்தையும், சிறியதாக அமைத்துக்கொண்டு கோபுரத்தின்மீது வீற்றிருப்பவரும், கர்ப்பவாஸம் பண்ணி யவதரித்தல், முகமும் உடலும் ஏக ஜாதீயமாகவே யிருத்தல், முதலான நியமங்களைப் பக்த பிரகலாதாழ்வானிடத்தில் உள்ள வாத்ஸல்யத்தினல் ஒழித்திட்டுத் திடீரென்று விலக்ஷண வடிவோடே இரணியன் முடியத் தோன்றின வருமான ஸ்ரீ அழகியசிங்கரைத் துதிக்கின்றேன்.

ஸுஹூஉ்ஶ்வஶ்ரூ ஸ்வஸ்த்ருதாதித்ரிஜஸ்ரம்
நிவஸதி பரிஹாரே ஹேரவர்ஜம் ரங்கயார்த்த: ।
ஸ்வ அந ந்ருவரிவாடீவாஸிதம் ஸ்வாஷி ஸிம்ஹ
ஸ்வசேர்வஷிதமேகம் ஜ்யோதிரந்த: ஸ்வகாந்தி: ॥

[இதர எம்பெருமான்கள்போல் கீழ்நிலத்தில் வீற்றிருக்காமல் மேட்டுநிலத்தில் எழுந்தருளியிருக்கு மிருப்பை நோக்கும்போது 'ஆவாரார் துணையென்று அலைநீர்க்கடலுள் அழுந்தும் நாவாய்போல் பிறவிக்கடலுள் நின்று துளங்கும் ஸம்ஸாரிகளுக்கு நானே போதுமான கைப்பிடி கொடுக்குந் துணைவன்' என்று தெரிவிக்கின்றனர் மேட்டழகியசிங்கர். அவரது திவ்ய திருமேனி ஒருபடியும் திருமுகம் ஒருபடியுமாய்ப் பொலிகின்ற ஒரு பரஞ்சோதி இதே கண்முன்னே விளங்காநின்றது.] இதுகாறும் பட்டர் ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் பரமனுகிய திரு நரசிங்கப்பெருமானைப் பரவு மாற்றை ஒருவாறு எடுத்தியம்பினேம். இனி வேறிடத்துக்குச் செல்வோம்.

ஹாரீத குல திலகரான ஸ்ரீவத்ஸாங்க ரென்னப்பெறும் கூரத்தாழ்வான் திருக்குமாரரும், ஸ்ரீரங்கநாதனுடைய திவ்யாஜ்ஞையினல் ஸ்ரீபராசரபட்டர் என்னும் திருநாமம்பெற்ற வருமாகிய ஸ்ரீரங்கநாத ஸ்வாமி, ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்கு ஒரு அரிய உயர்ந்த பாஷ்யம் அருளிச்செய்துள்ளார். அதற்கு பகவத்குண தர்ப்பணம் என்று பெயர்.

ஜாதோ லக்ஷ்மணமிஶ்ரஸம்ஶ்ரயதநாத் ஶ்ரீவத்ஸஹார்தாஶ்ரயே:
ஸம்யோ ஷட்வர்ஷஸாதி பணித: ஶ்ரீரங்கராஜஸ்ய ஸ்வயம் ।
ஶ்ரீ ஶ்ரீரங்கபதி ப்ரஸாதப்ருஷயா ஶ்ரீரங்கநாதாஹ்வய:
ஶ்ரீரங்கேஶ்வரகாரிதோ விவ்ருணுதே நாம்நாம் ஸஹஸ்ரம் ஹரே: ॥

[ஸ்ரீமத் ராமாநுஜ முனிவ ரென்னப்பெறும் ஸ்ரீ பாஷ்யகாரரை அடுத்திருப்பதே தனமாகப் பெற்ற ஸ்ரீ வத்ஸாங்கமிச்ரர் என்னும் ரிஷியினிடம் ஜநித்தவரும், ஸாக்ஷாத் ஸ்ரீரங்கநாதனலேயே பராசரபட்டர் என்று பேர் சொல்லப்பெற்றவரும், ஸ்ரீரங்கநாதன் என்று திருநாமம் பெற்றவருமான இந்தப் பட்டர் [இது தம்மைப் பிறர்போலக் கூறியது] இந்த ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யத்தை ஸ்ரீரங்கநாதனலேயே செய்விக்கப்பெற்று, ஸ்ரீரங்கநாதனது அநுக்ரஹத்தினுள்ள பெருவிருப்பத்தினல் இயற்றுகிறுர்.] இப்பாஷ்யத்தில் திருநரசிங்கன் விஷயமானவற்றைத் தொகுத்துக் காட்டுவேன். அவற்றை அடியிற் காண்க.

" 𑌨𑌾𑌰𑌸𑌿𑌂𑌹𑌵𑌪𑍁𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌕𑍇𑌶𑌵𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 "

நாரஸிம்ஹவபு:—நரசிங்க மேனியன்; ஸ்ரீமாந்—அழகுடையவன்; கேசவ:—சிறந்த குழலுடையவன்; புருஷோத்தம:—புருஷர்களிற் சிறந்தவன். [அவதாரிகை] தன்னிடத்தில் பக்தி பண்ணுமவர்களுக்கு நேரிடும் பிரதிபந்தகங்களைப் போக்குமவனென்கிறது மேல். நாரஸிம்ஹவபு:—பக்தனான ப்ரஹ்லாதாழ்வானுடைய பயத்தைப் போக்குவதற்காக அவன் அபேக்ஷித்த க்ஷணத்தில நரசிங்கம் என்கிற திவ்யமான திருமேனியைத் தரித்தவன். ஸ்ரீமாந்:—இப்படி ஒன்றுக்கொன்று சேராச் சேர்த்தியாயிருக்கின்ற நர ரூபமும் சிங்க ரூபமும் கலந்த திருமேனியெடுக்கச்செய்தேயும், ஸௌந்தரியம் லாவண்யம் முதலானவற்றால் அதி மநோஹரமாய் விளங்குமவன். அப்பொழுது நரங் கலந்த சிங்கமான அவ்வுருவம் சேர்ந்திருக்கிற அழகைக் கண்டவர்கள் பிறகு சுத்த ஸிம்ஹத்தையாவது சுத்த நரனையாவது கண்டால் இதென்ன விகாரம் என்னும்படி அவ்வளவு ஸுந்தரமாய் விளங்கினானென்றறிக. [அவதாரிகை] இப்படிப்பட்ட ஸௌந்தரியாதிகளுக்குத் தகுந்த லக்ஷணம் இஃது என்கிறது மேல். கேசவ:—மிகவும் கொண்டாடும்படி நீல நிறத்தோடு அழகாய் விளங்கும்படியான கறுத்துச் சுருண்டு சேர்ந்து இணங்கியிருக்கும் அழகிய கூந்தல்களையுடையவர். [அவதாரிகை] பகவானுக்கு லோகத்தில் காணப்படும் லக்ஷணமுண்டாயிருப்பதாகச் சொல்லவே ஸாதாரணமாய் நினைக்கும்படியிருக்குமென்று அவனை லோக விலக்ஷணன் என்கிறது மேல். புருஷோத்தம:—புருஷர்கள் என்னப்படும் பத்தர், முக்தர், நித்யர் என்ற மூவகைச் சேதனர்களைப் பார்க்கிலும் மிகச் சிறந்தவர்.]

𑌅𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃 𑌸𑌰𑍍𑌵𑌦𑍃𑌕𑍍 𑌸𑌿𑌂𑌹𑌃 𑌸𑌨𑍍𑌧𑌾𑌤𑌾 𑌸𑌨𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑍍 𑌸𑍍𑌥𑌿𑌰𑌃 ।
𑌅𑌜𑍋 𑌦𑍁𑌰𑍍𑌮𑌰𑍍𑌷𑌣𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑌾 𑌵𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑍁𑌰𑌾𑌰𑌿𑌹𑌾 ॥

[அம்ருத்யு:—மிருத்யுவுக்கு எதிரி; ஸர்வத்ருக்—யாவரையுங் காண்பவன்; ஸிம்ஹ:—ஸிம்ஹ ரூபன்; ஸந்தாதா—சேரவிட்டுக்கொள்பவன்; ஸந்திமாந்—ஸந்தியுடையவன்; ஸ்திர:—சலியாதவன்; அஜ:—பிறவியற்றவன்; துர்மர்ஷண:—ஸஹிக்கப்போகாதவன்; சாஸ்தா—ஆள்பவன்; விச்ருதாத்மா—பிரஸித்த விருத்தாந்தன். [அவதாரிகை] அனந்தரம் ந்ருஸிம்ஹாவதாரம் சொல்லப்பெறும். அம்ருத்யு:—மிருத்யுவுக்கு விரோதியானவன்; நரஸிம்ஹ மூர்த்தி மிருத்யுவுக்கு மிருத்யுவாயிருப்பவர். ஸர்வத்ருக்:—ஸகலரையுங் காண்பவன். அந்த நரசிங்கன் அநுகூலர், பிரதிகூலர், தடஸ்தர் என்கிற எல்லாரையும் அவரவருக்குத் தக்கபடி நடத்துவதன் பொருட்டு எல்லாவற்றையும் நன்றாகப் பார்த்தறிபவன். அவன் ஸர்வதோமுகனன்றோ? [அவதாரிகை] அவன்தான் ஆரென்றால்? ஸிம்ஹ:-மஹா நாரஸிம்ஹ ரூபி; அடுத்தவர்களைக் காப்பவன்; பகைவர்களை அழிப்பவன். ஸந்தாதா:-சத்துருவென்கிற மதயானையைப் பிளந்தானாகிலும், தன்னை உகந்தோரான ப்ரஹ்லாதன் முதலான பக்தர்கள் தழுவும்படியானவன். ஸந்திமாந்:—பக்தர்களுக்குத் தம்முடைய சேர்க்கை எக்காலமும் நீங்காமலிருக்கச் செய்பவர். ஸ்திர:—தாம் பக்தர்களிடத்தில் வைத்த அன்பு,

அவர்கள் செய்யும் அபசாரங்களாலும் விலக்கவொண்ணுதபடி ஸ்திரமாய் நிற்பவர். அஜ:—ஸ்தம்பத்தில் ஸம்பவித்தா னுகையாலே இதரரைப்போல் பிறவியில்லாதவன். ‘ நஜாயதெ ஜநித்ராம் யதஜஸூஹாதிநெகஜிக ’ [பிறவியைத் தரும் பிரகிருதியில் பிறக்கிறதில்லை யாகையாலே ஸ்வயம் ஜ்யோதியான பகவானை அஜன் என்கிறது.] துர்மர்ஷண:—எதிரிகள் கண்டு ஸஹிக்கமுடியாதவன். “ஸயாஜ்ஜுஸஜ்ஜுயா தாஸம் ப்ஹஜ்மஹாஹெதஜம் ஸாஹீஷணமு” [‘சக்கரம் சங்குகளைத் தரித்துப் பயங்கரமாய் விளங்கும் ப்ரஹ்மத்தின் மூர்த்தியை’ என்று நரஸிம்ஹத் தியானம் கூறுகிறது.] சாஸ்தா—இந்தக் கோலத்தோடு ஸகல துர்ஜநரையும் செருக்தவன். “நிநாதவித்ராஸித தாநவ:” [கர்ஜனையினுலேயே அஸுரர்களைப் பயமுறுத்தினர்] என்பது ஸ்ரீ விஷ்ணுபுராணம். விச்ருதாத்மா:— பிரஸித்த ஸ்வபாவன். என்றுல்—அவனே எப்போதும் எங்கும் எல்லாராலும் ஆச்சர்யப்படும்படி பிரஸித்தமான ஸிம்ஹாவதார விருத்தாந்தத்தை யுடையவன். ஸுராரிஹா—சுரருக்குப் பகையான ஹிரண்யகசிபுவை மார்பிளவாய்ப் பிளந்தவன். “ஸத்வகூஜஜெரணி தீவெதநாஹயவாணிநா ஸம்யஹ்தெயதா ஸஜ்ஜக ஹயா நரம் ஸெஹயம் வஸமு” சுத்த ஸத்வ மயமான விரல் வரிசையால் விளங்கு மிரண்டு திருக்கைகளாலும் பயத்தைப் போக்கித் தந்தவ ராகையாலே அவரே மேலான அபய ஸ்தாநம்] என்பது அவர் தியானம்.

ஸ்ரீ வான்மீகி பகவான் ஸ்ரீராமபிரானை ‘ராகவ ஸிம்ஹம்’ என்று அநுபவித்தார். ‘கோளரி மாதவன் கோவிந்தன்,’ ‘அரிமுகன் அச்சுதன்,’ ‘பேர்ல்லா வரக்கனைக் கிள்ளிக் களைந்தான்’ ‘சீரிய சிங்கம்’ என்ப் பாராட்டினுள் ஸ்ரீ ஆண்டாள். ஸ்ரீ பராசர பட்டர் அழகிய மணவாளனை “ரங்கேந்த்ர ஸிம்ஹம்” என்று நன்கு போற்றியுள்ளார். திரு நரசிங்கத் திருவரங்க நாதனே பட்டர் பரவும் பரமன். வாழ்க ஸ்ரீ பராசர பட்டர். வளர்க அவர் தூமொழிகள். உயர்ந் தோங்குக அவர் வண்புகழ்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விரோதி ௵ மாசி ௴ [1950 ௵ பிப்ரவரி – மார்ச் ௴]

[உத்தராயணம், ஶிஶிர ருது, கும்ப ௴.]

12—2—50	1௳	ஞாயிற்றுக்கிழமை	...	கும்பக்ருஷ்ண ஏகாதசி திதி; கும்பரவி 18.7 [இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்]
13—2—50	2௳	திங்கட்கிழமை	...	ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசி (வ்ரதம்)
15—2—50	5௳	வியாழக்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை
22—2—50	12௳	புதன்கிழமை	...	ஷஷ்டி திதி
23—2—50	12௳	வியாழக்கிழமை	...	அதிதி
24—2—50	13௳	வெள்ளிக்கிழமை	...	ஸப்தமி திதி
28—2—50	17௳	செவ்வாய்க்கிழமை	...	ஸர்வ ஏகாதசி; ஸ்ரீ குலசேகராழ்வார் திருநக்ஷத்ரம்

1—3—50	19௳	புதன்கிழமை	...	ஸ்ரீ. அ. மடம் 37-ம் பட்டம் ஸ்ரீன்ஸோபாக்கம் ஸ்ரீ வீரராகவ சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
5—3—50	20௳	வெள்ளிக்கிழமை	...	மாசி மகம்
4—3—50	16௳	சனிக்கிழமை	...	பௌர்ணமி
5—3—50	22௳	ஞாயிற்றுக்கிழமை	...	த்விதியை-த்ருதீயை திதி த்வயம்
6—3—50	23௳	திங்கட்கிழமை	...	த்ருதியை திதி
13—3—50	30௳	திங்கட்கிழமை	...	கும்பக்ருஷ்ணதசமி திதி

விரோதி ௵. பங்குனி ௴. [மார்ச்—ஏப்ரல், 1950]

[உத்தராயணம், சிசிர ருது, மீந ௴.]

14—3—50	1௳	செவ்வாய்க்கிழமை	...	சூந்ய திதி; ஸர்வ ஏகாதசி வ்ரதம்: காரடையான் நோன்பு; மீந ரவி 6-31 [இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்]
15—3—50	2௳	புதன்கிழமை	...	மீந க்ருஷ்ண த்வாதசி திதி; முநித்ரய ச்ரவண த்வாதசி
18—3—50	5௳	சனிக்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை
19—3—50	6௳	ஞாயிற்றுக்கிழமை	...	யுகாதிப் பண்டிகை
28—3—50	15௳	செய்வாய்க்கிழமை	...	ஸ்ரீராமநவமி
29—3—50	16௳	புதன்கிழமை	...	திருநாராயணபுரம் வைரமுடி ஸேவை
30—3—50	17௳	வியாழக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி வ்ரதம்
2—4—50	20௳	ஞாயிற்றுக்கிழமை	...	பங்குனி உத்திரம்; சாந்த்ர சித்ரா பௌர்ணமி; சந்த்ர க்ரஹணம் *
7—4—50	25௳	வெள்ளிக்கிழமை	...	பஞ்சமி-ஷஷ்டி திதி த்வயம்
8—4—50	26௳	சனிக்கிழமை	...	ஸப்தமி திதி
12—4—50	30௳	புதன்கிழமை	...	மீந க்ருஷ்ண ஏகாதசி

விக்ருதி ௵, சித்திரை ௴.

[உத்தராயணம், வஸந்த ருது, மேஷ ௴.]

13—4—50	1௳	வியாழக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி வ்ரதம்; மேஷ ரவி 26-52; விஷு புண்ய காலம். [இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்]

---

* சந்த்ர க்ரஹணம்:—பங்குனி ௴. 20௳ (2—4—50) ஞாயிற்றுக்கிழமை பௌர்ணமி ஹஸ்த நக்ஷத்ரத்தில் பூர்ண சந்த்ர க்ரஹணம்.

				மணி
ஸ்பர்சம்	...	இரவு	...	12-44
மத்யம்	...	,,	...	2-20
மோக்ஷம்	...	,,	...	3-45
ஆத்யந்த புண்யகாலம்			...	3-13

அன்று பகல் 3-மணிக்குள் போஜநம் செய்யவேணும். பௌர்ணமி திதி ச்ரார்த்தத்தை அன்றே செய்யலாம்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

ஆஸ்திக ஸபை, கோடம்பாக்கம், சென்னை

ஷை ஸபையின் ஆதரவில் நடந்துவரும் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸார ப்ரவசநத்தில் தத்வத்ரயாதிகாரம் முற்றுப்பெற்று, மேலே பரதேவதா பாரமார்த்யாதிகாரம் தொடங்கப் பட்டிருக்கிறது. ஆஸ்திக மஹான்கள் வந்து கேட்டு இன்புறுமாறு வேண்டுகிறோம்.

காரியதர்சிகள்.

* * * * * * * *

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸபா, தேரழுந்தூர்.

திருநக்ஷத்ர மஹோத்ஸவம்:—ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தாநத்தில் 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரா யெழுந்தருளி யிருந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம் இவ்வூர் ஸ்ரீ அஹோபில மடத்தில் வெகு ஸம்ப்ரமமாய் நடந்தேறியது.

உத்ஸவாதிகள்:—21—12—49 புதன்கிழமை முதல் இவ்வூர் ஸ்ரீ ஆமருவியப்ப னுக்குப் பகல்பத்து உத்ஸவம் உபக்ரமிக்கப்பட்டு, 30—12—49 வெள்ளிக்கிழமையோடு அம்மஹோத்ஸவம் பூர்த்தி யடைந்தது. மறுநாள் சனிக்கிழமை முதல் இராப்பத்து உத்ஸவம் தொடக்கமாகி, அது 9—1—50 திங்கட்கிழமையோடு முடிவடைந்தது. இவ்வுத்ஸவத்தில் தினம் மண்டபப்படி முடிந்ததும், ஸ்ரீ கோஸகன் ஏகாந்த ஸேவையுடன் திருவிண்ணழிக்கு எழுந்தருளும் வைகரி வாசாம கோசரம்.

புது நிர்வாஹ அதிகாரி நியமநம்;—ஸ்ரீ ஆமருவியப்பன் தேவ ஸ்தாநத்துக்குப் போர்டார் அவர்கள் சென்ற 16—12—49 லிருந்து ஸ்ரீமான் M. P. ஸ்ரீநிவாஸையர் அவர்களைத் தேவஸ்தாந நிர்வாஹ அதிகாரியாக நியமநம் செய்திருக்கிறார்கள். அன்னார், ஸந்நிதியின் ஸகல நிர்வாஹங்களையும் ஏற்று மிகுந்த பக்தி ச்ரத்தையுடன் கைங்கர்யங்களைச் செய்து வருகிறார்கள்.

ஸ்ரீ ஸஹஸ்ரநாம பாராயணம்:—31—12—49-ல் ஸ்ரீ வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு, ஸ்ரீ ஸஹஸ்ரநாம பாராயணம் நடப்ரதிஷ்டையுடன் நடத்தப்பட்டது. மாலை 7-மணிக்குச் சுமார் 100 திருநாமங்கள் பாராயணத்தோடு திருவீதிவலம் வந்து, 8-30 மணிக்கு ஸ்ரீ மடத்தை அடைந்தனர். பின்னர் கோஷ்டிக்கு நடதீர்த்த விநியோகாதிகள் நடைபெற்றன.

ஒரு ப்ரார்த்தனை:—நமது ஸபையின் சார்பில் விளங்கிவரும் 'ஸத் ஸம்ப்ரதாய ஸ்ரீ கோச நிலயம்,' தனது பணியை விரிவாக நடத்திக்கொண்டு வருகிறது. நமது 'ப்ரியா'வில் 'புஸ்தக விமர்சநம்' என்ற தலைப்பில் ஏராளமான ஸ்ரீ கோசங்கள் காணப்படுகின்றன. அதனதன் ஆசிரியர் எமது நூனிலயத்துக்கு இலவசமாக ஒவ்வொரு ப்ரதி அநுக்ரஹித்து உபகரிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

ஆத்ரேயம் கடாம்பி – நரஸிம்ஹாசார்யர்,
[காரியதர்சி]

* * * *

ஸ்ரீ அழகிய சிங்கர்களின் மஹோத்ஸவங்கள்

ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தாநத்தில் மூர்த்தாபிஷிக்தரா யெழுந்தருளியிருந்த 40, 41-வது பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கர்களின் வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்வங்கள், முறையே, விரோதிஹு மார்கழிமீ 29உ (13-1-50) அன்றும் மார்கழிமீ 11உ (26-12-49)

அன்றும், 42-ம் பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கருடைய 71-வது திருநக்ஷத்ர மஹோத்ஸவம் தைமீ 5உ (18-1-50) புதன்கிழமை யன்று பாதூர் அக்ரஹாரத்திலும், ஸ்ரீரங்கம் அஹோபில மடத்திலும் வெகு ஸம்ப்ரமமாக நடந்தனவாகப் பாதூர் ஸ்ரீ. உப. வா. ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமியும் ஸ்ரீரங்கம் ஸ்ரீ. உப. A. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியும் தெரிவித்திருக்கிறார்கள், 36-ம் பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கரின் வர்ஷாராதந மஹோத்ஸவம் மார்கழிமீ 19உ (3-1-50) அன்றும், 40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் வர்ஷாராதந மஹோத்ஸவம் தைமீ 3உ (16-1-50) அன்றும், பாதூரில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹா தேசிகன் ப்ருந்தாவநத்தில் விசேஷப்படியாக நடந்தனவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

* * * *

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்

ஸ்ரீ ஆண்டாள் சந்திர கலாமாலை அரங்கேற்று விழா

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் இருபத்தைந்தாவது வெளியீடாகிய 'ஸ்ரீ ஆண்டாள் சந்திர கலாமாலை' நிகழும் விரோதி யாண்டு மார்கழித் திங்கள் இருபத்தெட்டாம் நன்னாள் (12—1—50) வியாழக்கிழமை யன்று ஸ்ரீ வில்லிபுத்தூர் மார்கழி நீராட்ட மண்டபத்தில் ஸ்ரீ ஆண்டாள் திருவடி வாரத்தில் 12-மணிக்கு ஸமர்ப்பிக்கப் பெற்றது. அம்மாநகர் தமிழ் வித்வான் ஸ்ரீ திருமலை ஸ்வாமி அய்யங்கார் அவர்களும், அன்பர் மதுரைவாஸி இராமகிருஷ்ணய்யங்கார் அவர்களும் அங்குக்கூட இருந்து இதனை முற்றுவித்தனர். அதே மண்டபத்தில் மாலை 4-30 மணிக்கு ஸ்ரீ ஆண்டாள் திருமுன்பு அரங்கேற்று விழா தொடங்கியது. ஆயிரக்கணக்கான அடியார்கள் அங்குக் குழுமியிருந்தனர். அவர்களிற் பலர் சிறந்த சீரிய வித்வான்கள். தாசில்தார் ஸ்ரீமான் கிருஷ்ணய்யர் அவர்கள் அவைத் தலைமை தாங்கினார். மதுரை அட்வொகேட் ஸ்ரீமான் என். ஆர். கிருஷ்ணய்யங்கார் அவர்கள் 11—1—50-ல் அனுப்பியிருந்த கடிதம் ஸதஸ்ஸில் வாசிக்கப் பெற்றது. பின்னர், தமிழ்ச் சங்கக் கார்யதர்சி ஸ்ரீ. உப. ப. ரெ. திருமலை ஐயங்கார் கர்ண பரம்பரையாக வழங்கப்பட்டு வரும் சந்திர கலாமாலை நூலாசிரியர் வரலாற்றை ஸதஸ்ஸில் பரக்கப் பேசினார். அவைத் தலைவர் ஆண்டாளின் அநுக்ரஹ விசேஷத்தை உருக்கமாக எடுத்தியம்பி, சங்கத்தின் விசேடமான தமிழ்த்தொண்டினை மிகவும் பாராட்டி முற்றுரை செய்தார். காரியதரிசி வழங்கிய வந்தனோபசாரத்துடன் ஸத்ஸங்கம் மாலை ஆறு மணிக்கு நிறை வெய்தியது.

அவ்விழாவை யொட்டி 22-1-50 ஞாயிற்றுக்கிழமை திருவல்லிக்கேணி ரதவீதியிலுள்ள ஸ்ரீ அஹோபில மடத்தில், ஸ்ரீமான் வி. கே. பார்த்தஸாரதி ஐயங்கார் தலைமையில் அரங்கேற்று விழா வெகு சம்பிரமமாக நடைபெற்றது. அன்று காலை 8-30 மணிக்கு விழா ஆரம்பமாகியது. கடவுள் வாழ்த்துக்குப் பின் தலைவர் முன்னுரை கூற, வித்வான்கள் ஸி. எஸ். ஜகந்நாதாசாரியார், அநந்தபத்மநாப சர்மா, ப. ரெ. திருமலை அய்யங்கார், முறையே, 'மார்கழி நீராட்டம்,' 'ஸ்ரீ ஆண்டாள் ப்ரபத்தி,' சங்கத் தமிழ் மாலை' என்ற விஷயங்கள்பற்றி அனைவரும் கேட்டின்புறுமாறு அழகாக உபந்யஸித்தார்கள். ஸ்ரீ ஆண்டாள் சந்திரகலாமாலை ஸபையி லுள்ளவர்கட்கு வழங்கப்பெற்றன. தலைவரவர்கள் சிறியதொரு முற்றுரை கூற, விழா பதினொன்றரை மணிக்கு நிறைவெய்தியது.

பிற்பகல் 3 மணிக்கு அதே இடத்தில் ஆரம்பமாகியது. திருமயிலை அட்வொகேட் ஸ்ரீமான் டி. வி. விசுவநாதய்யர் அவர்கள் அவைத் தலைமை தாங்கினார்கள். காரியதரிசி சந்திரகலாமாலைப் பாக்களிற் சிலவற்றைக் கடவுள் வாழ்த்தாகப் பாடினார். தலைவர் முன்னுரை கூற, வித்வான்கள் வரதாசார்யர், ஸ்ரீரங்கம் சடகோபாசாரியர், காரப்பங்காடு வெங்கடாசாரியர், முறையே, 'திருப்பாவை ஸாரார்த்தம்,' 'ஸ்ரீ ஆண்டாள் சந்திர கலாமாலை,' 'ஸ்ரீகோதா ஸ்துதி' என்ற விஷயங்கள் பற்றித் தெளிவாக உபந்யஸிக்க'

தலைவர் முற்றுரை கூற, காரியதரிசி வந்தனோபசாரம் வழங்கக் கொண்டாட்டம் மாலை 6-15 மணிக்கு நிறைவெய்தியது.

18-1-50 திருவெவ்வுளூரில் நடைபெற்ற ஸ்ரீ அழகிய சிங்கர் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தில் அந்வயித்துச் சங்கக் காரியதரிசி அன்றிரவு நடந்த டோளோத்ஸவத்தில் 'முக்கோற்பகவர்,' 'ஸ்ரீ வீரராகவ மாலை,' 'திருமாமகள் மாலை,' 'திருநரசிங்கர் மாலை,' 'அழகிய சிங்கர் மாலை,' 'ஸ்ரீ ஆண்டாள் சந்திரகலாமாலை' என்ற ஆறு தமிழ் மாலைகளையும் ஸ்ரீ அழகிய சிங்கர் திருவடிகளில் ஸமர்ப்பிக்க, அம்மஹாதேசிகன் வழக்கம்போல் தமிழ் வித்வானுக்குரிய ஸம்பாவனையை அநுக்ரஹிக்க, 'எல்லாம் அழகிய சிங்கரின் பூரண இன்னருளே' என்று அஞ்ஜலி செய்து மீண்டு மேற்கண்ட உத்ஸவத்தை நடத்தி வைத்தார்.

ப. ரே. திருமலை அய்யங்கார்
[கார்யதரிசி.]

* * * * * *

ஸ்ரீ திருக்குடந்தை அழகிய சிங்கரின் 36-வது திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

நிகழும் விரோதிஹு தைமீ 18உ (31—1—50) ஸ்ரீ அஹோபில மடம் 38-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரா யெழுந்தருளியிருந்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவம், ஸ்ரீரங்கம் ஸ்ரீ தசாவதாரன் ஸந்நிதியில் அதிவிலக்ஷணமாய் நடந்தேறியது. மஹோத்ஸவம் 4-நாட்கள் முந்தி ஆரம்பிக்கப்பட்டு, உபயவேத பாராயணங்களும் க்ரந்த காலக்ஷேபங்களும் நடத்தப்பட்டன. சாத்துமறை யன்று காலை ஸ்ரீ அழகியசிங்கரின் திருவுருவப்படம் ஸ்ரீ பாதுகைகளுடன் ஸ்ரீ தசாவதாரன் ஸந்நிதி ப்ரதக்ஷிணமாக எழுந்தருளப்பண்ணப்பட்டு, திருமாலை திருப்பரியட்டங்கள் அருளிப்பாடாயிற்று. பின் விசேஷ சாத்துமறையும், தீர்த்த விநியோகங்களும், சுமார் 400 திருநாமங்களுக்குத் ததீயாராதநமும் ஸம்ப்ரமமாக நடந்தேறின. உள்ளூரில் பல திருநாமங்களும், திருச்சி, தஞ்சை, தில்லஸ்தாநம், கல்யாணபுரம், திருக்குடந்தை, திருவயிந்தை, தையார். சென்னை, சேலம் முதலிய பல விடங்களிலிருந்து அநேக ஸ்வாமிகளும் மஹோத்ஸவத்துக்கு எழுந்தருளியிருந்தனர். ஸ்ரீமான் M. B. க்ருஷ்ணமாசார்யர் ப்ரப்ருதிகளும், பெங்களூர் ஸ்ரீமான் V. நாராயணையங்கார் ப்ரப்ருதிகளும், இம்மஹோத்ஸவத்தைப் பக்தி ச்ரத்தையுடன் உடனிருந்து நடத்திவைத்தது போற்றற் குரியது. ஸ்ரீ தில்லஸ்தாநம் ஸ்வாமி, ஸ்வாசார்யோத்ஸவத்தைத் தேச கால வைகுண்யங்களையும், திருமேனியின் வார்த்தக்ய ப்ரயுக்தமான ச்ரமத்தையும் பாராட்டாது நடத்திவருவது, ஆசார்ய பக்தியதிசயத்தினாலும், அந்த ஆசார்யோத்தமனுடைய ஆஜந்மஸித்த வைபவ விசேஷத்தினாலுமே. ததீயாராதநாநந்தரம், ஸ்ரீ ஸ்வாமி, ஸ்ரீ திருக்குடந்தை அழகியசிங்கருடைய விசேஷித்த வைபவங்களையும், திவ்ய கல்யாண குணங்களையும், ஆஸ்தாந நிர்வாஹத்தின் பெருமையையும், தாம் ஸந்நிஹிதமாயிருந்து ஸேவித்தபடிகளையும் அதிரஞ்ஜகமாக உபபாதித்தருளியதுடன், தாம் ஸ்ரீதசாவதாரன் ஸந்நிதியில் இருப்பதற்கு ஸௌகர்யங்களையும், இவ்வுத்ஸவத்துக்குவேண்டும் ஆநுகூலங்களையும் அளித்தருளிய ப்ரக்ருத ஸ்ரீ அழகியசிங்கரின் ஔதார்யாதி மஹா குணங்களையும் பாராட்டினார். பின்னர், மேலப்பாளையம் வித்வான் ஸ்ரீ. உ.ப. மாட்பூசி. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஆசார்ய மஹிமையை ஸ்ரீ தேசிகன் ப்ரசம்ஸித்த ரீதியில் உபந்யஸித்தார். யதோசித ஸம்பாவனைகளுடன் உத்ஸவம் பூர்த்தியடைந்தது.

ஸ்ரீரங்கம்,
31—1—50.

தில்லஸ்தாநம் T. S. சேஷாத்ரி தாஸன்.

ஸ்ரீ:

ஸ்ரீ கல்யாணபிவர்த்திநீ ஸபா, மதுராந்தகம்

தேதி	அத்யக்ஷர் கலாசாலாத்யாபகர்கள்	உபந்யாஸகர்	விஷயம்
29—10—49	ஸ்ரீ. உப. P. N. ராகவாசார்ய ஸ்வாமி	T. க்ருஷ்ணமாசாரி	[illegible]
5—11—49	—	ஸ்ரீ. உப. ஸ்வர்ணம் ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமி	[illegible]
6—11—49	,, P. நாராயணாசார்ய ஸ்வாமி	S. V. ரங்கநாதன்	[illegible]
13—11—49	,, M. S. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி	O. N. க்ருஷ்ணன்	[illegible]
19—11—49	,, P. நாராயணாசார்ய ஸ்வாமி	K. P. திருமலை தாதாசாரி	[illegible]
21—11—49	,, A. S. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி	V. T. லக்ஷ்மீ நரஸிம்ஹன்	[illegible]
27—11—49	,, K. V. வீரராகவாசார்ய ஸ்வாமி	V. சேஷாத்ரி	[illegible]
5—12—49	,, S. கோபாலாசார்ய ஸ்வாமி	ஸ்ரீ. உப. கோஷ்டீபுரம் ஸ்வாமியின்	திருநக்ஷத்ர மஹோத்ஸவ வைபவம்
12—12—49	—	ஸ்ரீ. உப. சுண்டப்பாளையம். K. S. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி	[illegible]
13—12—49	,, N. V. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி	P. ஸ்ரீவத்ஸாங்கம்	[illegible]
18—12—49	,, V. D. ஸம்பத்குமார வரதாசார்ய ஸ்வாமி	P. C. சடகோபன்	[illegible]
26—12—49	,, M. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி	ஸ்ரீ அ. மடம் 41-ம் பட்டம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவ வைபவமும், அந்த ஆசார்யனுடைய திருக் கல்யாண குணங்களும்.	
27—12—49	,, M. S. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி	T. R. ஸௌம்யராகவன்	[illegible]

V. நரஸிம்ஹன் V. T. லக்ஷ்மீ நரஸிம்ஹன்,

[கார்யதர்சிகள்]

ஸ்ரீ:

ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ர மஹோத்ஸவம், பம்பாய்.

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் க்ருபையால் ஸ்ரீ அஹோபில மடம் 42-ம் பட்டம் அழகியசிங்கர் ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தைப் பம்பாய் வாஸிகள் மாதுங்கா, கிலால் குன்ஜில் (Killol Kunj) 7—1—50 முதல் 18—1—50 வரையில் குதூகலத்துடன் கோண்டாடினார்கள். அடியில் கண்டபடி உபந்யாஸ ஹரிகதா காலக்ஷேபங்கள் நடந்தேறின.

தேதி	உபந்யாஸகர்களின் திருநாமங்கள்	விஷயம்
7—1—50	ஸ்ரீ. உப. பெருமாள்கோவில் நரஸிம்ஹ தாதாசாரியர்	திருப்பாவை.
8—1—50	,, ஸர். S. வரதாசாரியர், B.A., B.L., Ex. Federal Court Judge.	Vedas and human reason (ஆங்கிலத்தில்)
9—1—50	,, பெருமாள்கோவில் நரஸிம்ஹ தாதாசாரியர்	ஸ்ரீ ஆண்டாள் வைபவம்.
11—1—50	,, M. V. வரதாசாரியர் B.A.,	த்ருவ சரித்ரம்
13—1—50	,, A. S. ஐயங்கார், B.A., L.L B., Director of Labour Welfare.	லோகவத்து லீலா கைவல்யம்
14—1—50	,, ஸர். S. வரதாசாரியர், B.A., B.L., Ex. Federal Court Judge.	ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வைபவம்.
15—1—50	,, M. V. வரதாசாரியர், B.A., கோஷ்டியார்	ப்ரஹ்லாத சரித்ரம் (ஹரிகதா காலக்ஷேபம்)
16—1—50	,, ஸ்ரீசைல தேசிகாசாரியர்	பக்தி.
18—1—50	,, S. நரஸிம்ஹாசாரியர், B.A., B.L.,	மனித வாழ்க்கை.
18—1—50	,, வித்வான். V. ஸ்ரீநிவாஸையங்கார்.	ஆசார்ய கடாக்ஷம்.

இம்மாதிரி 12 நாட்கள் உத்ஸவம் கொண்டாடும் பாக்யம் பம்பாய் வாஸிகளுக்கு இதுவரையில் இல்லாமல், முதல் முதலில் இவ்வர்ஷம் கிடைத்ததற்கு, ஸ்ரீ அஹோபில மட ஆஸ்தாந வித்வான் ஸ்ரீ உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி எழுந்தருளி, ஸ்ரீ பாஷ்யம் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் முதலிய ரஹஸ்ய க்ரந்தங்களை உபதேசித்து அநுக்ரஹித்ததுதான் காரணம். ஆசார்ய கடாக்ஷம் பெற்ற சிஷ்யகோடிகள் ஏகோபித்து ப்ரதி மாதமும் திருநக்ஷத்ரத்தைக் கொண்டாடவேண்டும் என்ற ப்ரார்த்தனையை ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனே தலைக்கட்டி வைக்கவேண்டும்.

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த “ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்” என்ற நாடகத்தை இந்த ஸபையார் ஸம்ஸ்க்ருதத்தில் சென்ற 24—12—49-ல் மாதுங்காவில் வெகு விமர்சையாய் நடத்தினர்கள். ஸ்ரீ பகவத் பாகவதாசார்ய கைங்கர்ய நிரதரும், இந்த ஸபையின் வைஸ் ப்ரெஸிடெண்டுமான ஸ்ரீமான். A. S. ஐயங்காருடைய தீவிர ப்ரயத்நத்தினலேயே நன்கு நடைபெற்ற இந்த நாடகம், அனேக ஜனங்களுக்கு ஆநந்தத்தைக் கொடுத்தது சென்னை ஸ்ரீமான். ஜகந்நாதையங்காருடைய உதவியாலும், நல்ல நடிப்புத் திறமை வாய்ந்தவர்களான திருவஹீந்த்ரபுரம் ஸ்ரீமான். E. D. ஸ்ரீநிவாஸாசாரியர் (விவேகர்), திருவையாறு ஸ்ரீமான். S. T. ஸ்ரீநிவாஸாசாரியர், M.A.L.T., (ஸ்ரீமதி) இவர்களுடைய ஒத்துழைப்பிஞலும் நடந்த இந்த நாடகம், ஹிந்துக்கள் குஜராத்திகள் மஹாராஷ்டரர்கள் முதலிய எல்லா ஜனங்களாலும் புகழப்பட்டது.

முகுந்தகிரி. வ. வரத தாஸன்.

[ஏஜெண்ட்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோஜ்ஞ: ப்ரதிஸத்ய வாதிதிமிரம் ப்ரஸந்நத்வம்
ஸஞ்ஜீவயத் த்விஜஸக்தியுத: ஸ்வயாத்ர ।
ஸ நந்த்யாம்ஸு ஹம்ஸ வாணப்ரவணஸ்வஹார்த்ரு
ப்ராணாஞ்ஜயோ ஹ்ருதயதே வராஹாய தஸ்மை ॥

ஸம்பாதகரின் குறிப்புகள்

ஸ்ரீமத் வேதமார்கேத்யாதி ஸ்ரீ அழகியசிங்கரால் நம் ஸித்தாந்தத்தின் அபிவ்ருத்திக்காக பரமக்ருபையுடன் ஆரம்பிக்கப்பட்ட **ஸ்ரீ மாலோல வித்வத் ஸபையின் ஒன்பதாவது வார்ஷிக ஸம்மேளனம்**, இவ் வருஷம் திருவெவ்வுளூரில் ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் திருவோலக்கத்தில் நாளது விரோதி ஹு மார்கழிமீ 25வ (9—1—50) உபக்ரமிக்கப்பட்டு, வெகு விமரிசையாக நடந்து, ஸ்ரீ அழகியசிங்கரின் வார்ஷிகத் திருநக்ஷத்ர மஹோத்ஸவ நன்னாளாகிய தைமீ 5வ (18—1—50) புதன்கிழமை இனிது பூர்த்தி யடைந்த விஷயத்தை நமது வாசக மஹாசயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ப்ரபல பண்டிதர்களும் கனபாடிகளும் எழுந்தருளியிருந்து காலையிலும் மத்யாஹ்நத்திலும் வேதாந்த விஷயங்களில் வாக்யார்த்தங்களும், பரீக்ஷைகளும், ராத்ரியில் உபந்யாஸங்களும் நடைபெற்றன.

வித்வத்ஸதஸ்ஸும் திருநக்ஷத்ர மஹோத்ஸவமும்

ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரத்தன்று பற்பல இடங்களிலிருந்து அநேக வைதிக லௌகிக ப்ரமுகர்கள் வந்திருந்தனர். அன்று எல்லா சிஷ்ய கோடிகளும் ஆசார்யோத்தமனின் ஸேவையால் தந்யராயினர். ஸ்தஸ்ஸில் அந்வயித்த வித்வான்களுக்கு ஸ்ரீ அழகியசிங்கர் நியமனப்படி தகுந்த ஸம்மாநமும் செய்யப்பட்டது. விசேஷ ததீயாராதனமும் நடந்தது. இந்த ஸதஸ்ஸையும் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தையும் பற்றிய விரிவான வ்யாஸம் அடுத்த ஸஞ்சிகையில் வெளிவரும். இப்படி பரம ஔதார்யத்துடன் நம் தர்சனத்தை வளர்த்து வரும் ஸ்ரீ அழகியசிங்கர் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தளியிருந்து அனைவரையும் அநுக்ரஹிக்க வேண்டுமென்று ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ப்ரார்த்திக்கிறோம்.

* * * * *

சென்ற தைமீ 13வ (26—1—50) யன்று நமது தேசத்தில் புதிய அரசியல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப் புதிய அரசியலின்படி நமது தேசம் ஒரு மதச் சார்பற்ற ஜந நாயகம் அல்லது குடியரசாக இருந்து வரும். வம்ச பரம்பரையாக ஜநங்களை ஆளும் அரசன் தலைமையில் இனி நமது அரசாங்கம் நடந்துவராது. ஜநங்கள் தேர்ந்தெடுத்த ஜநாதிபதி தான் அரசாங்கத்தின் தலைவராயிருப்பார். இங்கிலாந்து, அமெரிக்கா, முதலிய பல வெளிநாடுகளில் வழங்கிவரும் அரசியல் முறையை

நமது குடியரசு

கவனித்து, பல் வேறு மதத்தினரையும் பல வகைப்பட்ட கலாசாரங்கள் உள்ளவர்களையும் கொண்ட நம் தேசத்தின் நிலைமைக்கு ஏற்றவகையில் இந்த அரசியலைத் தயாரித்திருப்பதாக இதனை ஸ்ருஷ்டித்தவர்கள் கூறுகின்றனர். இப் புதிய முறை நம் தேசத்தை எவ்வளவு தூரம் முன்னேற்ற மடையச் செய்யப் போகிறதென்பது நாளடைவில் தான் தெரியவேணும். ராஜா இல்லாமல் ஆரம்பிக்கப் பட்டதால் இது அராஜகமானாலும் இது அராஜகத்தில் இறங்கிவிடாமல் தேச க்ஷேமத்தையே வ்ருத்தி செய்யக்கூடியதா யிருக்கவேணு மென்று ஸர்வ சரண்யனை ப்ரார்த்திக்கிறோம்.

“𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌜𑌾𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌯𑌨𑍍𑌤𑌾𑌂 𑌨𑍍𑌯𑌾𑌯𑍍𑌯𑍇𑌨 𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌣 𑌮𑌹𑍀𑌂 𑌮𑌹𑍀𑌶𑌾𑌃”

அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் இப் புதிய அரசியல் எவ்வளவு ஹிதமானது, எவ்வளவு பொருத்தமானது, என்ற விஷயத்தில் அந்தந்த சாஸ்த்ர நிபுணர்களிடையே வேறுபட்ட அபிப்ராயங்கள் இருந்துவருகின்றன. அவைகளைப் பற்றி இங்கு நாம் ஒன்றும் கூற விரும்பவில்லை. இந்த அரசியலில் ஜநங்களுக்கு மூலாதார உரிமைகள் என்று சில உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பற்றி சிறிது சிந்திப்போம். அவற்றில் முக்யமானது சிந்தனை சொல், நம்பிக்கை, மதம், வழிபாடு, இவற்றில் ஜநங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் ஸ்வாதந்த்ர்யம். இந்த உரிமையைக் கொடுப்பதாகச் சொல்லப்படும் எல்லா ஷரத்துகளையும் கவனித்தால் கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்வாதந்த்ர்யம் உண்மையில் ஸ்வாதந்த்ர்யமே யில்லை யென்று சொல்ல வேண்டியிருக்கிறது. உதாஹரணமாக அரசியலின் 25-வது ஷரத்தில் முற்பகுயில் கொடுக்கப்பட்ட மத விஷயமான ஸ்வாதந்த்ர்யத்திற்கு அபவாதமாக (விலக்காக) ஷெ ஷரத்தின் பிற்பகுதியில் ஸமூஹ க்ஷேமம், சீர்திருத்தம், பொதுவான ஹிந்து மத ஸ்தாபநங்களில் எல்லா ஹிந்துக்களையும் அநுமதிப்பது, முதலிய கார்யங்களுக்காக அரசாங்கம் சட்டம் இயற்றலாம் என்றும், அம்மாதிரி கார்யங்களுக்காக இயற்றப்பட்டு தற்போது அமுலிலுள்ள சட்டங்களும் செல்லுபடி உள்ளவை யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ‘ஸமூஹக்ஷேமம்,’ ‘சீர்திருத்தம்’ என்ற இரண்டு வார்த்தைகளையும் அவரவர்களுக்குத் தோன்றியவகையில் தட்டி நீட்டி அர்த்தம் செய்ய இடமிருக்கிறது. சாரதா சட்டத்தையும் ஆலய ப்ரவேசச் சட்டத்தையும் எடுத்துக் கொள்வோம். இவை இரண்டும் சாஸ்த்ர விருத்தம் என்பது நிஸ்ஸம்சயம். ஆயினும் மதத்தில் பூர்ண விச்வாஸமுள்ள ஒருவர் இவைகள் விஷயத்தில் தனது மதப்படியும் மனஸ்ஸாக்ஷிப்படியும் அநுஷ்டிக்க ப்ரகிருத அரசியல் சட்டம் இடம் தருகிறதா என்பது ஸந்தேஹத்திற் கிடமான விஷயம். ஸர்க்கார் மதப்பற்றற்ற ஸர்க்காரா யிருக்கு மென்றும், மத விஷயங்களில் மேலே கண்டபடி சட்டமியற்ற அரசாங்கத்திற்கு அதிகாரமிருந்து வருமென்றும் ஏற்பாடு செய்திருப்பது பரலோகத்தில் நம்பிக்கை யில்லாதவர்களும், ஆஸ்திகர்களை த்வேஷிப்பவர்களும் அரசாங்கத்தைக் கைப்பற்றிக்கொண்டு, ஆஸ்திகர்களை அவரவர் மதக் கோட்பாடுகளைப் பின்பற்றவொட்டாமல் துன்புறுத்துவதற்குத்தான் இடங்கொடுக்கும். சென்ற சில காலமாய் இப்படித் தான் மாகாண சட்டஸபைகளிலும், மத்ய சட்ட ஸபையிலும் நடந்து வருவதைப் பார்த்துவருகிறோம். அதே நிலைமை நீடிக்க புதிய அரசியல் இடம் கொடுத்திருக்கிறது.

இம்மையிலும் மறுமையிலும் ஸகல ஜனங்களுக்கும் ஹிதத்தையே நாடி நிற்கிறது நமது வைதிக தர்மம். அதை அடிப்படையாகக் கொண்டு செழித்தோங்கி வந்தன நம் புராதந ராஜ்யங்கள். அவரவர் ஸ்வதர்ம நிஷ்டராயிருக்கும்படி தேசபாலகர்கள் பரிபாலித்து வந்தனர்.

𑌕𑌾𑌲𑍇 𑌵𑌰𑍍𑌷𑌤𑍁 𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌸𑌸𑍍𑌯𑌶𑌾𑌲𑌿𑌨𑍀 ।
𑌦𑍇𑌶𑍋𑌽𑌯𑌂 𑌕𑍍𑌷𑍋𑌭𑌰𑌹𑌿𑌤𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑍁 𑌨𑌿𑌰𑍍𑌭𑌯𑌾𑌃 ॥
𑌲𑍋𑌕𑌾𑌃 𑌸𑌮𑌸𑍍𑌤𑌾𑌃 𑌸𑍁𑌖𑌿𑌨𑍋 𑌭𑌵𑌨𑍍𑌤𑍁

என்று பெரியோர்கள் ஆசாஸித்தனர். ஆசாஸித்தபடியே ஸம்ருத்தியும் சாந்தியும் நிலவியிருந்தன. இப்போது அந்த ஸம்ருத்தியையும் சாந்தியையும் நாம் காணவில்லை. வைதிக தர்மத்தை அடிப்படையாகக்கொண்டு அரசியலை வகுத்து நடத்தாமல் தர்மசக்ரத்தைக் கொடியில் வைத்துக்கொண்டதால் மட்டும் தர்ம ராஜ்யத்தை—ராம ராஜ்யத்தை—ஸ்தாபித்ததாக ஆகிவிடாது. நம் பாரத தேசம் பூர்ண ஸ்வாதந்த்ர்யம் அடைந்ததும் தர்ம ராஜ்யம் ஏற்பட்டுவிடுமென நம்பியிருந்தோம். ஆனால் இப் புதிய அரசியல் நாம் எண்ணியபடி நம் தேசத்தின் ப்ராசீந தர்மத்தையும் கலாசாரத்தையும் அபிவ்ருத்தி செய்யுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை யென்பதை வருத்தத்துடன் நாம் குறிப்பிட வேண்டியிருக்கிறது. எனினும் கொஞ்சம் நம்பிக்கைக்கு இடமிருக்கிறது. இந்த அரசியலைத் திருத்தவும் மாற்றி யமைக்கவும் இதில் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் ஆஸ்திகராயுள்ளவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பெருமுயற்சி செய்தால் இதைத் தக்கபடி மாற்றி யமைத்து தர்மராஜ்யத்தை ஸ்தாபிக்கலாம். அப்படி நடக்கும்படி சரண்யன் அருள் புரிய வேணும்.

* * * *

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவில் "செய்திகள்" வெளியிடுவதைப்பற்றியும் வெளியிடப் பெற்று வரும் செய்திகளைப் பற்றியும் நமது வாசக மஹாசயர்களுக்குப் பலவகைப்பட்ட அபிப்ராயங்கள் இருந்து வருவதாக அறிகிறோம்.

செய்திகள்

இம் மாதிரி செய்திகளால் பெரும்பாலான வாசகர்களுக்கு அதிக ப்ரயோஜநமில்லை யென்றும், இவைகளை வெளியிடுவதை விட இன்னும் உபயோக முள்ள வ்யாஸங்களை வெளியிடலாமென்றும் சிலர் நினைக்கிறார்கள். ஆனால் செய்திகளை அனுப்பும் ஸஹ்ருதயர்களுக்கும், அந்தச் செய்திகளில் சொல்லப்படும் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டவர்களுக்கும் வேறு விதமாய் தோன்றும். இது ஸஹஜமே. நமது வாசக மஹாசயர்களில் பெரும்பாலோரின் அபிப்ராயம் இன்னதென்று திட்டமாகத் தெரியும் வரையில் "செய்திகள்" என்ற தலைப்பின் கீழ் அதற்குரிய விஷயங்களை மிகவும் ஸங்க்ரஹமாக வெளியிட்டு வரலாமென்று தீர்மானித்திருக்கிறோம். ஒரு ஸஞ்சிகையில் இரண்டு பக்கங்களுக்கு அதிகப்படாமல் செய்திகளுக்கு இடம் ஒதுக்கி வைப்பதுதான் யுக்தமென்று நினைக்கிறோம். செய்திகளைப் பிரசுரிப்பதற்கு அனுப்பும் நமது ஸஹ்ருதயர்கள் செய்தியை அனுப்பும் முன், நம் ஸித்தாந்தம் ஸம்ப்ரதாயம் இவற்றின் நன்மையையும் அபிவ்ருத்தியையும் மட்டும் மனத்தில் கொண்டு "இச் செய்தி அவச்யம் ப்ராசுரிக்கப்படவேண்டியதா? இதை வேறு

விதத்தில் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா வாசகர்கள் தெரிந்து கொண்டிருக்க மாட்டார்களா? புதிதான விஷயங்களைப் போதிக்கும் வ்யாஸத்தை விட இது முக்யமா?'' என்று நன்றாக யோசித்து, அவச்யமென்று தோன்றினால் மிகவும் சுருக்கமாய் செய்தியை எழுதியனுப்பவேணுமென்று ப்ரார்த்திக்கிறோம். மிகவும் நீண்ட செய்திகளைப் பலர் அனுப்புகிறார்கள். இப்படி அனுப்பப்படும் செய்திகள் எல்லாவற்றையும் நிராகரிக்காமல் அப்படியே ப்ரசுரிப்பதென்றால் ஸஞ்சிகையில் வேறு வ்யாஸங்கள் வெளிவர இடமே இராது. செய்திகள் அனுப்பப்பட்டால் அவை இடத்திற்கும் ஆவச்யகதைக்கும் தக்கபடி யதோசிதம் ஸங்க்ரஹிக்கப்பட்டு, மிகவும் முக்யமான செய்திகளே வெளியிடப்படுமென்பதையும், இதை வேறு விதமாக நினைக்காமல் இருக்கவேணுமென்பதையும் நமது ஸஹ்ருதயர்களுக்கு விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறோம்.

ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியாவின் சந்தா வரவு 6–1–'50 முதல் 4–2–'50 வரை

சந்தா நெ.		பெயரும் விலாஸமும்.	வர்ஷம்	தொகை.
44	ஸ்ரீ.	S. ரங்கஸ்வாமி ஐயங்கார், திருவண்ணாமலை	50	3
77	,,	S. ஸௌந்தரராஜய்யங்கார், புதூர்	50	3
73	,,	J. வரதராஜய்யங்கார், திருநெல்வேலி	50, 51 & 52	9
170	,,	T. தோதாத்ரி ஐயங்கார், தெப்பக்குளம்	50	3
175	,,	B. K. குப்புஸ்வாமி ஐயங்கார், குத்தி	50	3
214	,,	S. ஸ்ரீநிவாஸகோபாலய்யங்கார், சருக்கை	49	3
274	,,	M. சடகோபாச்சாரியார், ஒரகடம்	49	2
289	,,	V. S. ரங்காசாரியர், கோயமுத்தூர்,	50	1
442	,,	K. நரஸிம்மாசாரியர், குவளவேலி	50	3
513	,,	S. M. கிருஷ்ணமாசாரியர், புது டில்லி	49 & 50	6
631	,,	சேட்லூர் T. கோபாலாசாரியர், காடிபீரோ	50	3
644	,,	U. சக்ரவர்த்தி ராஜம்மாள், அவளூர்	50	1½
675	,,	K. G. ஸந்தானமய்யங்கார், கும்பகோணம்	50	3
686	,,	V. S. ஸ்ரீனிவாஸராகவாசாரியர், தி. நகர்	50	3
754	,,	T. V. ராமய்யங்கார், திருநெல்வேலி	50	3
772	,,	N. V. ராகவன், மாதுங்கா, பம்பாய்	50	3
783	,,	S. ஸ்ரீனிவாஸ வரதன், மேல்மாம்பலம்	48	2
801	,,	L. ரங்கஸ்வாமி ஐயங்கார், மாதுங்கா	50	3
854	,,	T. S. சாரங்கபாணி ஐயங்கார், மாவூர்	50	3
889	,,	R. S. தாதாசாரியர், மாதுங்கா	50	3
890	,,	K. R. ஸ்ரீனிவாஸாச்சாரியர், ஸ்ரீரங்கம்	50	3
894	,,	R. ராமஸ்வாமி ஐயங்கார், ராயம்பேட்டை	50	3
895	,,	களத்தூர் மாடபூசி நரஸிம்மாசாரியர், செங்கற்பட்டு	50	3
896	,,	S. ரங்கஸ்வாமி ஐய[illegible]	50	3
898	,,	T. ராமானுஜய்யங்கார், பேரம்பூர்	50	3

சந்தா வரவு தொடர்ச்சி 4—2—50 வரையில்

901	,,	A. S. அய்யங்கார், Commissioner of Labour, Bombay			50	3
902	,,	M. T. சுந்தரம்,	மாதுங்கா	பம்பாய்	50	3
903	,,	K. ரங்கஸாமி	,,	,,	50	3
904	,,	N. கேசவன்	,,	,,	50	3
905	,,	M. E. K. சர்மா	,,	,,	50	3
906	,,	A. ராஜகோபாலன்	,,	,,	50	3
907	,,	M. N. வீரராகவய்யங்கார்	,,	,,	50	3
908	,,	N. கோவிந்தராஜன்	,,	,,	50	3
909	,,	N. ராகவன்	,,	,,	50	3
910	,,	S. T. சாரி	,,	,,	50	3
911	,,	K. R. ஆராவமுது,	ஸயான்	,,	50	3
912	,,	M. B. ஸ்ரீனிவாஸன்,	மலாட்	,,	50	3
913	,,	S. பத்மநாபன்,	கோரேகான்	,,	50	3
914	,,	N. K. சாமி	,,	,,	50	3
915	,,	S. ஆராவமுதன்	,,	,,	50	3
916	,,	R. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்	,,	,,	50	3
917	,,	V. ரங்கஸாமி,	தோம்பிவிலி	,,	50	3
918	,,	V. K. ஜகந்நாதாச்சாரி	,,	,,	50	3
919	,,	K. V. ராமஸ்வாமி அய்யங்கார்		,,	50	3
920	,,	K. ராமஸ்வாமி	,,	,,	,,	3
921	,,	D, ராமஸ்வாமி	,,	,,	,,	3
922	,,	W. P. K. அய்யங்கார்	,,	,,	,,	3
923	,,	K. P. ஸ்ரீநிவாஸ அய்யர்	,,	,,	,,	3
924	,,	T. ஜகந்நாதன்	,,	,,	,,	3
925	,,	G. G. சாரி	,,	,,	,,	3
926	,,	B.V.பார்த்தஸாரதி அய்யங்கார்	,,	,,	,,	3
927	,,	N. K. சாரி	,,	,,	,,	3
928	,,	T. R. சாரங்கபாணி	,,	,,	,,	3
929	,,	R. அய்யாசாமி	,,	,,	,,	3
930	,,	S. T. சாரி	,,	,,	,,	3
931	,,	N. R. ஸ்ரீநிவாஸன்	,,	,,	,,	3
932	,,	V. S. ரங்கநாதன்	,,	,,	,,	3
933	,,	R. ஸௌந்தரராஜன்	,,	,,	,,	3
934	,,	P. S. பார்த்தசாரதி	தாஹ	,,	,,	3
935	,,	S. ராஜகோபாலன்	தாதர்	,,	,,	3

மொத்தம் ரூ. 183-8

சந்தாதாரர்கள் தங்கள் பழைய பாக்கிகளையும்,, 1950வருஷத்திய சந்தாவையும் சீக்கிரமே அனுப்பிவைக்கும்படி ப்ரார்த்திக்கிரேம். மணியார்டர் கூபனில் சந்தா நம்பரையும் விலாஸத்தையும் மறக்காமல் எழுதவேணும்.

ஸம்பாதகர்.

189267

ஆஸ்திகர்களுக்கு அறிவிப்பு

ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபா என்னும் பெயர்கொண்ட ஸபை
சென்னையில் 1947-வருஷம அக்டோபர் மாதத்தில்
ஸ்ரீ காஞ்சீ P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின்
தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிறது.

இந்த ஸபையின் மூலமாகத் தமிழ் லிபியிலும், தெலுங்கு லிபியிலும்
நம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்க ளெல்லாம் மிகவும் அழகிய முறையில்
அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகின்றன.

"ஸ்ரீராமாநுஜன்"

என்ற பெயரால் மாதப் பத்ரிகையும் தமிழ் தெலுங்கு உபய பாஷைகளிலும்
தனித்தனி நடத்தப்பட்டு வருகின்றது.

ஷை ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையில்

மொத்தமாக 250 ரூபாய் செலுத்துகிறவர்கள் பேட்ரன்கள்.

100 ரூபாய் செலுத்துகிறவர்கள் ஜீவிய சந்தாதாரர்கள்.

வருஷந்தோறும் (போஸ்டேஜ் உள்பட) 15 ரூபாய் சந்தா செலுத்துமவர்கள்
ஆர்டினரி மெம்பர்கள்.

ஆக இம்மூன்று வகுப்பிலும் சேர்ந்தவர்கள் மாதப் பத்ரிகைக்காகத்
தனிப்பட்ட சந்தா செலுத்தவேண்டியதில்லை.

மாதப் பத்ரிகை மாத்ரம் விரும்புமவர்களுக்கு

தமிழ்ப் பத்ரிகையின் வருஷச் சந்தா ரூ. 4.
தெலுங்கு பத்ரிகையின் வருஷச் சந்தா ரூ. 5.

மற்றும் இது ஸம்பந்தமான விவரங்களுக்கு விசேஷ விளம்பரம் தருவித்துப் பார்க்க.

கடிதப் போக்குவரத்துகளுக்கும் மணியார்டர் அனுப்புவதற்கும் விலாஸம்:—

P. B. அண்ணங்கராசாரியர், க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

க்ரந்தமாலா ஆபீஸ் பதிப்புகளுக்கு விரிவான காட்லாக் வரவழைத்துப் பார்க்க. உடையவர், நம்பிள்ளை, தேசிகன், மணவாளமாமுனிகள் முதலான பூருவாசாரியர்களருளிச்செய்த ஸகல க்ரந்தங்களும், அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகள் இயற்றிய நாலாயிர திவ்யப் பிரபந்த வியாக்யானங்கள், ஸ்ரீ வசநபூஷண ஆசார்ய ஹ்ருதயாதி ரஹஸ்ய வியாக்கியானங்கள், ஸகல ஸ்தோத்ரபாட வியாக்கியானங்கள் மற்றும் பல ஸம்ப்ரதாய நூல்கள், பலவகை உபந்யாஸ நூல்கள், சரித்திர நூல்கள் இங்கே கிடைக்கும்.

மானேஜர்,

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

Regd. No. M. 443

Arya Va..ya Vilasini Vaidya Sa..

H. O. CALICUT.

Estd. in 1921

[APPROVED BY THE GOVT. OF MADRAS.]

Proprietor and Chief Physician :—

K. NEELAKANTAN VAIDYAR, Regd. Medical Practitioner.

Branches :— 1. No. 24, Nagappa Iyer St., Triplicane, Madras.
2. Chinnakadai St., Teppakulam Post, Tiruchirappalli.
3. Dindugal Road, Mathwrai.

STOCKISTS.—1. Dr. Kerrison, Salem; 2. Dr. Karunakara Menon, Vasantha Hospital, Salem, Velur; 3. Vaidyam Mahadeva Swamy Iyer, Virudhunagaram; 4. National Stores, Devakottai; 5. V. R. Menon & Co., 111, Rastaspeth, Poona; 6. Karaikkudi; 7. Sri P. K. Balasubramania Iyer, Palani; 8, Sri S. G. Krishna Iyer, Coimbatore Variety Hall Road; 9. Dindugal; 10. Erode; 11. Aruppukkottai.

All Kinds of Ayurvedic Treatments Pizhichil, Dara, Navarakkizhi etc., undertaken. Success sure. Nursing home at H. O. & Branches. Treatment also undertaken at the patient's residence. Expert in Rhuematism, Paralysis, Brain fever, Appendices etc.

Many respectable gentlemen have tried our medicines and visited our Medical Factory, Medical Hall, rare madicinal plants garden, Nursing Home etc. The names of some of the above said gentlemen are mentioned hereunder who have given their kind testimonials.

1. Sri A. S. Bharathan, G. M. Revters & P. T. I., Bombay; 2. Sri K. P. Gopala Menon, Bar-at-law, Madras; 3. Sri M. C. B. Koman, I. C. S., Judge; 4. Sri S. Y. Krishnaswamy I. C. S., Collector; 5. K. Krishna Menon, Principal, Law College; Madras; 6. Sri Kutty Krishna Menon, Govt. Pleader, Madras. 7. Sri A. Mallikarjuna Rao, Medical Officer, Madras; 8. Sri R. M. Mathew, Director of Public Health, Madras; 9. Sri M. K. Mookherjee, President, All India Ayurvedic Congress; 10. Sri A. S. M. Nair, Commissioner, H. R. E., Board, Madras; 11. Divan Bahadur T. Rangachariar, C.I.E., Madras; 12. Sri Manjeri Rama Iyer, Advocate, Calicut; 13. Sri K. M. Unnithan I.E.S., Madras; 14. Vaidyaratnam Sri P. S. Varier, Kottakkal, Malabar.

OUR SPECIAL MAKE :—Panchavalkadhi & Dasapushpadi Soaps for itches, Scabbies and Boils, In all the branches experienced Araya Vaidyans are in charge to look after.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street L. Kancheepuram. Edited and Published by P. S. Srinivasa Desikachariar, No. 2. Audiappa Mudali Street, Purasawakkam, Vepery, Madras - 7.